முச்சந்தி முரளி



"இனிமேல்
அரசியல்வாதிமார்
கராட்டி கிளாஸுக்கும்
போனாத்தான்
நிண்டுபிடிக்கலாம் போல"

Registered as a Newspaper

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 269

புதன்கிழமை
21 ஒகஸ்ட் 2024

ஆவணி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055




## புதன்பொய்கை

## இளைஞரின் இறப்பில் குடும்பத்தினர் சந்தேகம்

### பொலிஸ் விசாரணை தீவிரம்

முல்லைத்தீவு, ஓக. 21

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட மன்னாங்கண்டல் பகுதியில் கடந்த 18 ஆம் திகதி குடும்பத் தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட நிலையில், அவருடைய இறப்பில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. 15

# புதைகுழிகளுக்கு நீதிகோரி முல்லைத்தீவில் போராட்டம்

## அகழப்பட்ட மண்ணை அள்ளியெடுத்து தாய்மார்கள் கண்ணீருடன் கதறல்

**முல்லைத்தீவு, ஒகஸ்ட் 21**

**இலங்கையில் கண்டறியப்பட்ட மனிதப்புதைகுழிகளுக்கு நீதி கோரியும், அவற்றின் உண்மைத்தன்மைகள் வெளிப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழிக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.** 15

## ரணிலுக்கு சிலிண்டர் ஒதுக்கீடு: முறைப்பாடு அடிப்படையற்றது!

கொழும்பு, ஓக. 21

சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்ட எரிவாயு சிலிண்டர் சின்னம் தொடர்பில், ஒரு தரப்பினர் முன்வைத்துள்ள விமர்சனங்கள் அடிப் 15

## மாதிரி வாக்குச்சீட்டு: வெளியிட்டது ஆணைக்குழு

கொழும்பு, ஓக. 21

ஜனாதிபதித் தேர்தலின் வாக்குச்சீட்டு மாதிரி வெளியிடப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 39 வேட்பாளர்களின் பெயர்களைக் கொண்ட இந்த மாதிரிச் சீட்டு நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் நீளமான வாக்குச்சீட்டாக இது அமைந்துள்ளது. (அ-ம-சி)

## தேர்தல் செலவுச் சட்டத்தை ஆணைக்குழு மீறியுள்ளது!

### வழக்குத் தொடர்வோம் என விஜயதாஸ கடும் காட்டம்



கொழும்பு, ஓக. 21


ஜனாதிபதித் தேர்தலின்போது, வாக்காளர் ஒருவருக்கு 109 ரூபா அடிப்படையில் வேட்பாளர்களால் செலவிடமுடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளமையானது, தேர்தல் செலவு கண்காணிப்புச் சட்டத்தை மீறியிருக்கும் செயலாகும் என்று ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார். 15

### கட்டுப்பாடிழந்த பேருந்து

## பயணிகள் அருந்தப்பு!

பருத்தித்துறை, ஓக. 21

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த தனியார் பேருந்து திடீரென கட்டுப்பாட்டை இழந்தபோதும் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டு பயணிகள் அதிர்ஷ்டவசமாக தப்பிய சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. 15



'குடு' திகா: 'பார்' குமார்

## அரசியல் விவாதத்தில் எம்.பி.க்கள் கைகலப்பு

கொழும்பு, ஓக. 21

தனியார் தொலைக்காட்சியொன்றில் நேற்று நடந்த அரசியல் விவாத நிகழ்ச்சியின்போது, கடும் சொற்போரில் ஈடுபட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15



# 70% வாக்குகளை வாரிக்குவிப்பேன்

### அநுரகுமார அழுத்தம் திருத்தம்

கொழும்பு, ஓக. 21

ஜனாதிபதித் தேர்தலில் 70 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றிபெறுவேன் என்று ஜே.வி.பி.யின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை இம்முறை நாம் பெறுவது உறுதி. 15

## பெரமுனவின் காலைவாரிய பிரதேசசபை உறுப்பினர்கள்

கொழும்பு, ஓக. 21

குருநாகல் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர்கள் 17 பேர் ரணிலுடன் இணைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேரடி விவாதம் நான் 'ரெடி'

## அழைப்பை ஏற்றார் நாமல்

**கொழும்பு, ஓக. 21**

**செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுடன் நேரடி விவாதத்துக்கு நான் தயார் என்று ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்ச அறிவித்துள்ளார்.**

டெய்லி மிரர் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் முன்னணி வேட்பாளர்களுடன் விவாதத்தில் கலந்துகொள்ள விருப்பம் என்று நாமல் தெரிவித்துள்ளார்.

பிரதான வேட்பாளர்களிடையே பொது விவாதத்தின் இந்த நடைமுறையை நாம் புகுத்த வேண்டிய நேரம் இது.

இதனால் குடிமக்கள் ஒவ்வொரு வேட்பாளரின் பார்வை, கொள்கைகள் மற்றும் செயற்றிட்டங்களை ஒப்பீட்டளவில் புரிந்துகொள்வதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். எதிர்வரும் தேர்தலில் மக்கள் அறிவார்ந்த தீர்மானத்தை எடுக்க இது உதவும் என்றும் நாமல் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# மல்கம் ரஞ்சித்துக்கு நாமல் உறுதிமொழி

கொழும்பு, ஓக. 21

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பின்போது உயிர்த்த ஞாயிறுதாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் குறித்த விசாரணைக்கான சுயாதீன ஆணைக்குழுவொன்றை அமைக்கவேண்டியதன் அவசியத்தை கர்தினால் வலியுறுத்தியுள்ளார்.

அதற்கு சுயாதீனநீதி ஆணைக்குழுவை அமைப்பதற்கு நாமல் ராஜபக்ச இணக்கம் வெளியிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# வாக்குக் கேட்டால் அடி!

கொழும்பு, ஓக. 21

2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க கோரி தமது கிராமத்துக்கு வரும் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என மாத்தளை நாவுல, அடவல கிராம மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தமது எச்சரிக்கையை விளம்பரங்களாகக் காட்சிப்படுத்தி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

அரசியல்வாதிகள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றவில்லை.

வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசியல்வாதிகள் தங்கள் கிராமத்துக்கு வரவேண்டாம் என்றும் அவ்வாறு வந்தால் தாங்கள் பதில் சொல்லத் தயார் என்றும் கிராம மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ச-இ)

# பயணம் வழிமாறினால் நாட்டுக்கு வீழ்ச்சியே!

## ஜனாதிபதி ரணில் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 21

சரியான பொருளாதார மாற்றமின்றி நெருக்கடியைத் தீர்க்கும் வேலைத்திட்டத்தை பாதியில் நிறுத்தினால், நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

சில கட்சிகள் உள்ளூர் பொருளாதாரம் பற்றிப் பேசுகின்றன. நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண புதிதாகச் சிந்தித்து கட்சிபேதமின்றி புதிய வேலைத்திட்டத்துக்குச் செல்லவேண்டும்.

அதற்காக ஒரு பெரும் குழு என்னுடன் இருக்கின்றது. அதனால் தான் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட தீர்மானித்துள்ளேன்.

நாட்டில் கடந்த 75 வருடங்களாக முன்னெடுத்துச் சென்ற சித்தாந்தங்கள் காரணமாகவே நாட்டில் விரைவான பொருளாதார வளர்ச்சியை எட்டமுடியவில்லை. எனவே இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது எதிர்காலம் குறித்து சிந்தித்து முடிவெடுக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# சிலிண்டர் சின்னம் ரணில் விளக்கம்!

கொழும்பு, ஓக. 21


ஒரு சுயேச்சை வேட்பாளர் எந்தச் சின்னத்தையும் தேர்வு செய்யலாம், இந்த நேரத்தில் எரிவாயு சிலிண்டரே மிகவும் பொருத்தமான சின்னம் என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

யானைச் சின்னத்துக்குப் பதிலாக எரிவாயு சிலிண்டரை ஏன் தெரிவு செய்தீர்கள்? என்ற கேள்விக்கு ஜனாதிபதி விளக்கமளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசியல் கட்சிகளை ஒதுக்கி வைக்கவேண்டும் என்ற கருத்து இன்று வலுவாக உள்ளது. இதனடிப்படையில் நமது அரசியல் அணுகுமுறையை மறுபரிசீலனை செய்யவேண்டும். பல்வேறு குழுக்களுடன் இணைந்து பணியாற்றியதால், சுயேச்சையாகப் போட்டியிட முடிவு செய்துள்ளேன். ஒரு சுயேச்சை வேட்பாளர் எந்தச் சின்னத்தையும் தேர்வு செய்யலாம், இந்த நேரத்தில் எரிவாயு சிலிண்டரே மிகவும் பொருத்தமான சின்னம் என்று நான் உணர்ந்தேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# ஈஸ்டர் தாக்குதல் சதி அம்பலப்படுத்துவேன்

## சஜித் திட்டவட்டம்



கொழும்பு, ஓக. 21

மக்களின், குறிப்பாக கத்தோலிக்க சமூகத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் உள்ள உண்மையை அம்பலப்படுத்துவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதியளித்துள்ளார்.

கொழும்பு பேராயர் இல்லத்துக்கு சென்று கர்தினால் மல்கம் ரஞ்சித் மற்றும் கொழும்பு பேராயர் உதவி ஆயர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்ட போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் உண்மையை வெளிக்கொணர ஒரு தெளிவான திட்டம் தன்னிடம் இருக்கின்றது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்பட்டதா என்றும், உண்மை முழுமையாக வெளிப்படுத்தப்பட்டதா என்றும் கத்தோலிக்க சமூகம் தலைமையிலான முழு தேசத்திடமும் கேள்வி எழுப்புவேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# ஊழலை நிச்சயம் ஒழிப்பேன்

## விஜயதாஸ சபதம்

கொழும்பு, ஓக. 21

தேர்தல்காலங்களில் இடம்பெறும் மோசடிகளைத் தடுப்பதற்காகவே தாம் அமைச்சுப் பதவி வகித்தபோது தேர்தல் செலவினங்கள் தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தேன் என்று ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. தேர்தல் பரப்புரைப் பணிகளும் இடம்பெறுகின்றன.

ஊழல் மோசடிகளில் மூழ்கியுள்ள அரசியல் தலைமைகளே நாட்டின் ஆட்சியாளர்களாக வருகின்றனர். இந்த ஊழல்களை ஒழிப்பதற்காகவே நான் தேர்தல் செலவினச் சட்டத்தைக் கொண்டுவந்தேன்.

தற்போது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் குறித்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிமுறைகளே நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன- என்றார். (ச-இ)

# திலித்துக்கு இ.ம.தே.க. ஆதரவு

கொழும்பு, ஓக. 21

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி வேட்பாளர் தொழிலதிபர் திலித் ஜயவீரவுக்கு இலங்கை மக்கள் தேசிய கட்சி ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது.

இதன்படி இலங்கை மக்கள் தேசியக் கட்சி மற்றும் சர்வஜன அதிகாரத்துக்கு இடையிலான புரிந்து ணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர மற்றும் இலங்கை மக்கள் தேசிய கட்சியின் தலைவர் நாகராசா விஷ்ணுகாந்தன் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருவிழாவின் 11 ஆம் நாள் மாலை உற்சவத்தை முன்னிட்டு மயில் வாகனத்திலேறி பக்தர்கள் புடைசூழ வெளி வீதி உலா வந்து அருள்பாலித்தார். (ச-45-100)




# அதிகாரப் பகிர்வு வழங்காதோர் வடக்கு - கிழக்குக்கு வரவேண்டாம்

## ஈ.பி.டி.பி. கட்சி தெரிவிப்பு


யாழ்ப்பாணம், ஓக.21

மாகாண முறைமைக்கு, அதிகாரங்களோ அதிகாரப் பகிர்வோ வழங்கமறுக்கும் வேட்பாளர்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வரத்தேவையில்லை என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தென்னிலங்கையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் வடக்கு - கிழக்கு ஒன்றிணையக் கூடாதென்றும் அதிகாரப் பகிர்வுக்கு என்றுமே இடமில்லை என்றும் பொலிஸ் காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக கிடைத்த அந்த குறைந்த அதிகாரம் கொண்ட மாகாண முறைமைக்கு அதிகாரங்களோ அதிகாரப் பகிர்வோ வழங்க மறுக்கும் ஜனாதிபதி வேட்பாளர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பிரசார நடவடிக்கைகளுக்கு வரத்தேவையில்லை. அவ்வாறான வேட்பாளர்களை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-27)



# அடிக்கல்

கிளிநொச்சி, ஓக.21

கிளிநொச்சி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்தில் 61 அடி உயரமான பஞ்சதள இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடப்பட்டது. நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (ச-45-113)




### நல்லூரில் தொழுதிடுவார் அனுதினம்'

'கலியுகக் கந்தனென காணும் அழகினைக்
கவியில் போற்றிடுவோர் ஒருபுறம்
கந்தக் கடவுள் எமது சொந்தக் கடவுள் என்று
தம் சிந்தையில் நினைத்திடுவோர் ஒருபுறம்
பந்தபாசமகற்றியே பாவ வினைகள்
அழித்திடப் பாடிப் பரவிடுவோர் ஒருபுறம்
தூப தீபங்கள் ஒளிர்ந்திடும் அழகினைக்
கண்குளிர் கண்ணீர் மல்க கண்டிடுபவர்
ஒருபுறம் தேவசேனாதிபதியென
தோகைமயிலுடன் நல்லூரில்
தொழுதிடுபவர் அனுதினம்'

■ திருமுறைச்செல்வர்
ப.பாலசுப்பிரமணியம்

# சுற்றுலாவிகள் வடக்குக்கு படையெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக.21

மூன்று நாள் விடுமுறையைப் பயன்படுத்தி பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வடக்குக்கு வந்திருந்தனர். யாழ்ப்பாணத்திலுள்ள மதத்தலங்கள், சுற்றுலா மையங்களை அவர்கள் பார்வையிட்டனர். அத்துடன் நல்லூர், செல்வச்சந்நிதி, நயினாதீவு, கீரிமலை, காங்கேசன்துறை ஆகிய இடங்களிலும் அதிகளவான சுற்றுலாவிகளை அவதானிக்கமுடிந்தது. (ச-இ)



# இயற்கை இடர் பாதிப்பு உதவிகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக.21

பொன்னாலையில் கடும் காற்று காரணமாக பாதிக்கப்பட்டு உடைமைகளை இழந்த 3 குடும்பத்துக்கு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகமும் இலங்கை செஞ்சிலுவை சங்கமும் இணைந்து அத்தியாவசிய பொருள்களையும் உடைகளையும் வழங்கிவைத்தனர்.

நிகழ்வில் வட்டுக்கோட்டை லயன் கழகத்தினர், செஞ்சிலுவை சங்கத்தினர், கிராம அலுவலர் சிவரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். அதே வேளை பாதிக்கப்பட்ட மூன்று குடும்பங்களும் மலசல கூட வசதியின்றி வாழ்ந்து வந்த நிலையில் சங்கானை பிரதேச செயலரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரின் நிதிப்பங்களிப்பில் மலசலகூடம் அமைக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச-125)

# நல்லூர்த் திருவிழாவின் 13ஆம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.21

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

13ஆம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் [illegible] சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, [illegible] அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோவில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ. நாகேஸ்வரக்குருக்கள் சிவசங்கரக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் ஈஸ்வரானந்தம் தயாரூபன் பிரதம அதிதியாகவும் சிறப்பு அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழக வருகை விரிவுரையார் கலாநிதி ஏ. அனுசாந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

சைவ திருத்தொண்டர்சபை அறநெறிப் பாடசாலை, நெல்லை முருகன் அறநெறிப் பாடசாலை, உச்சில் அம்மன் அறநெறிப் பாடசாலை, அம்பாள் சமேத கல்யாண சுந்தரர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.

விஷேட நிகழ்வாக அனுராகம் கவின்கலை நிலையம் வழங்கும் குழு இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.21
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் செப்ரெம்பர் 2ஆம் திகதி திங்கட்கிழமைவரை இடம்பெறவுள்ளது.
அராலி கிழக்கு மலையாளங்காட்டு ஐயனார் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது. (ரி)

# நியாய விலையின்றி பூசணி, தர்ப்பூசணி

### கண்ணகைபுரம் விவசாயிகள் ஆதங்கம்

கிளிநொச்சி, ஓக.21
கிளிநொச்சி, கண்ணகைபுரத்தில் உற்பத்தி செய்யப்படும் பூசணி, தர்ப்பூசணி போன்றவற்றுக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கண்ணகைபுரம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் மேட்டுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் கிராமங்களில் ஒன்றாக கண்ணகைபுரம் காணப்படுகின்றது.
இவ்வாண்டும் கண்ணகைபுரத்தில் பூசணி, தர்ப்பூசணி போன்றவை பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்ட போதிலும் உற்பத்திக்கான நியாயமான விலை கிடைக்கவில்லை. இதனால் பெரும் நட்டத்தை எதிர்நோக்க நேரிடுகிறது.
எனவே அவற்றுக்கு நியாயமான விலையைப் பெற்றுத் தருவதோடு வெளிமாவட்டங்களுக்கு அவற்றை விநியோகிப்பதற்கும் வழிவகை செய்யவேண்டும் என்றும் விவசாயிகள் மேலும் கோரிக்கை விடுத்தனர். (ச-4513)



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். பிணக்குகள் நீங்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். ஆதாயம் ஏற்படும். உறவினர்கள் வகையில் சுபச்செய்தி கிடைக்கும்.

**இடபம்:** வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவேண்டிய நாள். பொறுமை அவசியம். வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும். பிரச்சினைகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். மனஸ்தாபங்கள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் வகையில் ஆதாயம் கிடைக்கும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**சிம்மம்:** மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்ப விடயமாக சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். சுபச்செய்தி வரும். உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவுமிருக்காது. காரியம் இழுபறியாகும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அனுசரித்துச் செல்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைக்கக் கூடும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். ஆதாயம் ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும். அலைச்சல் ஏற்படும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும்.

**மகரம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும். சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். முருகப்பெருமான் வழிபாடு நலம் தரும்.

**கும்பம்:** காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். செலவு ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும். ஆதாயம் உண்டு. மகாவிஷ்ணுவை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மீனம்:** பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. சுபச்செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் இணக்கமான அணுகுமுறை அவசியம்.





## நினைவுதின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.21
சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட கூட்டுறவாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சின்னத்தம்பி சிவமகாராசாவின் 18ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்தார். நிகழ்வில் கூட்டுறவாளர்கள் கலந்துகொண்டனர். (ரி-17,66)

## அக்கராயனுக்கு குடிதண்ணீர்

கிளிநொச்சி, ஓக.21
கிளிநொச்சி, அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள நீர்த்தாங்கியில் இருந்து விநியோகிக்கப்பட்ட குடிதண்ணீர் கடந்த மூன்று மாதங்களாக விநியோகிக்கப்படாத நிலையில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட இடைக்கால நிர்வாகம் குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தின் தொட்டிகளை துப்புரவு செய்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் குடிதண்ணீரை விநியோகித்து வருகின்றது. (ரி-13)



## வாள் காவடி!

வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச்சந்நிதி ஆலய தீர்த்த திருவிழாவான நேற்றுமுன்தினம் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஒருவரால் எடுக்கப்பட்ட வாள் தூக்குக்காவடி பலரது கவனத்தையும் ஈர்த்தது. இரும்புக் கோடாரியால் ஆன சக்கரம் ஒன்று தயாரிக்கப்பட்டு மூன்று கூரிய வாள்களுக்கு மேல் இருந்தவாறு, முதுகிலும் பக்க வாட்டிலும் 12 வாள்களை ஏற்றி தனது நேர்த்திக் கடனை அவர் நிறைவு செய்தார். (ச-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நடக்குமென்பார் நடக்காது

செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களை ஒரேமேடையில் விவாதிக்க வைக்கும் முயற்சியில், தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பவ்ரல்' அமைப்பு ஈடுபட்டிருக்கின்றது. இந்த விவாதத்தில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க, அரியநேந்திரன், திலித் ஜெயவீர, நாமல் ராஜபக்ச ஆகியோரை பங்கெடுக்க வைக்க முயல்கின்றது 'பவ்ரல்' அமைப்பு. இப்படியான விவாதங்கள் ஆசிய நாடுகளில் இதுவரை நடந்ததில்லை. அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளிலேயே இப்படியான விவாதங்கள் சாத்தியமாகியிருக்கின்றன. 'பவ்ரல்' அமைப்பின் முயற்சி வெற்றிபெற்றால், இப்படியான விவாதம் நடத்தப்பட்ட முதல் ஆசிய நாடு என்ற பெயரை இலங்கை பெறும். ஆனால் அது சாத்தியமாவதற்குரிய சந்தர்ப்பம் ஒரு வீதமளவில் கூட இல்லை என்பதுதான் உண்மை.சில மாதங்களுக்கு முன்னர், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் நேரடி விவாதத்துக்குத் தயார் என்று அறிவித்திருந்தனர். அந்த விவாதத்துக்குப் பல தடவைகள் திகதிகள் அறிவிக்கப்பட்டபோதும், தற்போதுவரை அவர்கள் நேருக்கு நேர் சந்தித்து விவாதிக்கவில்லை. பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு அந்த விவாதம் ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் மறக்கப்பட்டிருந்தது.

நாட்டில் உள்ள அரசியல்வாதிகள் என்னதான் மேடைகளில் தாங்கள் தான் மீட்பர்கள் என்பது போல முழங்கினாலும், அடுத்தவர்களை நோக்கிச் சரமாரியாகக் குற்றச்சாட்டுகளை அடுக்கினாலும், மக்களைப் பொறுத்தவரையில் அடிப்படையில் அனைவரும் ஒரே குட்டைக்குள் ஊறிய மட்டைகளே. நாட்டில் உள்ள அரசியல்வாதிகளில் எவரும், கறை படியாத கரங்களைக் கொண்டவர்கள் அல்லர். மக்கள் முன்பாக முஷ்டியை முறுக்கி மோதிக்கொள்ளும் இவர்கள், மறைமுக வேலைகளில் ஒன்றாகவே இருக் கின்றனர். அதனாலேயே எவர் ஆட்சிக்கு வந்தாலும் எந்த மோசடிகளும் அம்பலத்துக்கு வராது மூடி மறைக்கப்படுகின்றன. இவை மக்கள் அறியாததல்ல, ஆனால் வேறு வழியின்றி - ஒப்பீட்டு அளவிலேயே அரசியல் தலைவர்கள் மக்களால் தெரிவு செய்யப்படுகின்றனர். இது பதவிக்கு வரும் அரசியல் தலைவர்களுக்கும் தெரியாத ஒன்றல்ல.

நிலை இவ்வாறிருக்க, பொது மேடையில் நேரடி விவாதம் என்பது சாத்தியமற்றது என்பது சிறு குழந்தைக்குக்கூடப் புரியும். மடியில் கனமிருக்கும்போது அரசியல் தலைவர்கள் பொது மேடையில் ஒன்றாக விவாதிப்பதற்கு ஒருபோதும் தயாராக இருக்க மாட்டார்கள். தங்கள் பொட்டுக்கேடுகள் வெளிப்பட்டு விடும் என்ற அச்சம் அவர்களை ஒருபோதும் இவ்வாறான விவாதத்துக்குச் செல்லவிடாது. அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளில் இவ்வாறான விவாதங்கள் சாத்தியமாவதற்கு, அங்குள்ள நாகரீகமான அரசியலே முதன்மைக் காரணம். சிறு தவறுகளுக்குக் கூடப் பொறுப்பேற்று தங்கள் பதவிகளை விட்டு விலகிச் செல்லும் அரசியல் பண்பாடு அந்நாடுகளில் இன்றும் இருக்கின்றது. தனது முதுமை, நாட்டை ஆள்வதற்கு தடையாக இருக்கும் என்பதை உணர்ந்து தான், ஜோ பைடன் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புக் கிடைத்தும் அதை உதறினார். இங்கென்றால் அப்படியெல்லாம் நடக்குமென கனவு கூடக் காணமுடியாது. ஒரு நாட்டின் பொருளாதாரத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு எவ்விதக் குற்ற உணர்வும் இல்லாது இப்போதும் பதவிகளைத் தொங்கிப்பிடித்திருக்கும் அரசியல் கலாசாரம் நீடிக்கும் இலங்கையில் இவ்வாறான கனவான் தனமான, ஆரோக்கியமான விவாதங்கள் நடக்க இன்னும் பல்லாண்டுகள் ஆகும் என்பதுதான் வேதனையான உண்மை.



அஞ்சல் மூல வாக்களிப்பு

# அரச பணியாளர்கள் 7 இலட்சம் பேர் தகுதி

கொழும்பு, ஓக. 21

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு 7 இலட்சம் அரச சேவையாளர்கள் தகுதி பெற்றுள்ளனர். தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.**

ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல்மூல வாக்கெடுப்பை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4, 5 மற்றும் 6ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. மாவட்டச் செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு செப்ரெம்பர் 4ஆம் திகதி அஞ்சல்மூலவாக்களிப்பை செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதேநேரம் குறித்த 3 தினங்களில் அஞ்சல் மூலம் வாக்களிக்கத் தவறியவர்களுக்காக செப்ரெம்பர் மாதம் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகள் வாக்களிப்புக்கான மேலதிக தினங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. (ச-இ)

# இடைநிறுத்தப்பட்டது சொகுசு பஸ் சேவை!

கொழும்பு, ஓக. 21

கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் மற்றும் மாகும்புர பல்வகை போக்குவரத்து நிலையத்துக்கு இடையில் போக்குவரத்து சேவைக்காக ஆரம்பிக்கப்பட்ட புதிய சொகுசு பஸ் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. கடந்த 16 ஆம் திகதி விமான நிலையம் கோட்டை பஸ் ஊழியர் சங்கம் புதிய சொகுசு பஸ் சேவைக்கு எதிராக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமையால் குறித்து சொகுசு பஸ் போக்குவரத்து சேவையை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# புதுவித பரப்புரையில் பொன்சேகா

ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா லாந்தர் சின்னத்தில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடுகின்ற நிலையில்,அவரின் முதலாவது தேர்தல் பேரணி கம்பஹா மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன்போது போர்க் காலத்தில் வெடிகுண்டு தாக்கப்பட்ட காரையும் அவர் தனது பேரணிக்குக் கொண்டு சென்று பரப்புரையில் ஈடுபட்டார். (ச-இ)

# மண்சரிவு எச்சரிக்கை

நாட்டின் பல பகுதிகளுக்கு மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது. கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை, மாத்தறை, மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கும் களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய, புளத்சிங்கள மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான, எஹெலியகொட, எலபாத்த ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச)

# எம்.பி.க்களுக்கு கட்டுப்பாடு

கொழும்பு, ஓக. 21

எதிர்வரும் மாதத்தில் அத்தியாவசிய வேலைகளைத் தவிர வெளிநாடு செல்வதை தவிர்க்குமாறு அரசாங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் தமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளனர்.

தேர்தல் பரப்புரை வேலைத்திட்டத்துக்கு அதிகபட்ச பங்களிப்பை வழங்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எம்.பி.க்கள் தங்கள் கிராமங்களில் தங்கி தேர்தல் பிரசார நிகழ்ச்சிகளில் முடிந்தவரை பங்களிக்க வேண்டும் என்றும் கட்சித் தலைவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ச-இ)

## நாளை

22.08.2024

வியாழக்கிழமை - ஆவணி - 06

சுபநேரம் : 07.35 - 09.05

ராகுகாலம் : 01.35 - 03.05

## நாளொரு நல்வார்த்தை

யாராவது உங்களை அவமானப்படுத்தினால் ஓர் அனுபவம் சேகரிக்கப்பட்டதெனக் கருதுங்கள்.

- ஸ்டான்லி ஜோன்ஸ்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைக்கு வழங்கிய வாகனம் தென்னக்கோனின் பாவனையில்

கொழும்பு, ஓக. 21

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விசாரணைகளுக்கென ஜப்பானிய அரசாங்கத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட வாகனம் இப்போது முன்னாள் பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து உயர்நீதிமன்றத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ள தேசபந்து தென்னக்கோனின் பாவனையில் உள்ளது. தேசபந்து தென்னக்கோன் விகாரைக்கு ஆசீர்வாதத்துக்கு அண்மையில் சென்றபோது இந்த வாகனத்திலேயே பயணம் செய்துள்ளார். இந்த ஒளிப்படம் சமூகவலைத்தளங்களில் வெளியாகியுள்ளன. (ஓ-6)

## நாமலின் களமிறக்கம் சு.சுவாமி வரவேற்பு



கொழும்பு, ஓக. 21

நாமல் ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை இந்திய மத்திய அரசின் முன்னாள் அமைச்சர் சுப்பிரமணிய சுவாமி வரவேற்றுள்ளார்.

ராஜபக்ச குடும்பத்தினர் இந்தியாவை குடும்பம் என நினைப்பதால் நாமலின் பிரவேசத்தை இந்தியர்கள் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மஹிந்த ராஜபக்ச புலிகளை ஒழித்தமையால் ராஜபக்ச குடும்பத்தினருக்கு இந்தியர்களிடம் தனி மரியாதை உண்டு எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## அருளுரை இன்று!

யாழ்ப்பாணம், ஓக. 21

நல்லைக்கந்தப்பெருமான் மகோற்சவ காலத்தை முன்னிட்டு சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் நடத்தப்பட்டு வரும் அருளுரை பெருந்திருவிழாவின் 13ஆம் நாளான இன்று புதன்கிழமை 'முக்திநிலை' எனும் தலைப்பில் அருளுரை இரவு 8.00 - 8.30 மணி வரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெற உள்ளது. (ஓ-100)


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா.
நிலம் இழுத்துப் பதிக்க 100 ரூபா.

077 334 1281

(CS/28716) J-1

## ஆசிரியர்கள் தேவை

வடமராட்சியில் அமைந்துள்ள பிரபல தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பாடங்களுக்காக ஆசிரியர்கள் தேவை.

வரலாறு - ICT
விஞ்ஞானம் - சுகாதாரமும் உடற்கல்வியும்.
கணிதம் - குடியுரிமை

077 388 6219

(CS/55980) J-1

## பெயர் மாற்றம்

அச்சுவேலி வடக்கு அச்சுவேலியில் வசிக்கும் இரத்தினம் சாரதா ஆகிய நான் எனது பெயரை இரத்தினம் சாரதாதேவி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இரத்தினம் சாரதாதேவி என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

இரத்தினம் சாரதாதேவி

(CS/55981) J-1

## தேவை

சமையற் பணிப்பெண் தேவை

- கல்லூரி விடுதியில் சமையல் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
- விடுதியில் தங்கியிருந்து பணிபுரிபவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- வயது 35 - 60 வருடங்கள்.
- விண்ணப்பங்களைத் தபால் மூலமாக அல்லது நேரடியாக அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 27.08.2024
அனுப்பவேண்டிய முகவரி :

அதிபர்
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
6. கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(CR/42954) J-1

# Invitation for Bids (IFB)

## VAVUNIYA NORTH PRADESHIYA SABHA - NEDUNKERNY

[1]. The Chairman Local Authority Procurement Committee (LAPC), on behalf of Vavuniya North Pradeshiya Sabha, Nedunkerny invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. No | Contract No. | Name of the Contract | Estimated Civil Cost (Rs. Mn) | ICTAD Grade Required | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bond Amount (Rs.) | Validity Period | |
| 01 | PSDG/VN/VNPS/ W/03-2024 | Construction of Nedunkerny Kulakkaddu Road | 2.26 | C7/C8 Highway | 23,000.00 | 18.12.2024 | 84.0 Days |

[2]. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure. Since the total cost estimate of this procurement is below Rs.50Mn, Regional preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016(ii)

[3]. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been required valid CIDA registration in **Highway Construction** for the Grade mentioned in the table above and possess valid business or company registration.

[4]. Interested bidders may obtain further information from **Secretary, Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny** [Telephone No: 024 2053014 Fax No: 024 2053084 Email: vnpsnk@gmail.com] and inspect the bidding documents at the address **Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny from 09.00 Hrs to 15.00 Hrs** on working days.

[5]. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny from 21.08.2024 until 03.09.2024 from 09.00 Hrs to 15.00 Hrs** on working days Upon payment of a non-refundable fee of **Three Thousand Rupees (Rs.3,000.00) The method of payment will be by cash.**

[6]. Bids shall be delivered in duplicate to the address at Secretary, **Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny on or before 04.09.2024 and 10.30 Hrs.** Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

[7]. Bid shall be valid up to **20.11.2024.**

[8]. All bids shall be accompanied by a "Bid-Security, as mention in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above.

[9]. The pre-bid meeting will be held on **28.08.2024 at 10.30 Hrs at the Vavuniya North Pradeshiya Sabha, Mullai Road, Nedunkerny**

The address (es) referred to above is (are):

**Chairman**
**Local Authority Procurement Committee,**
**Vavuniya North Pradeshiya Sabha,**
**Mullai Road, Nedunkerny.**

(CR/42953) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களைத் தாக்கும் 'இன்ஃபுளுவென்சா'

## அவதானம் தேவையென சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

**கொழும்பு, ஓக. 21**

**இன்ஃபுளுவென்சா வைரஸ் தற்போது சிறுவர்களிடையே பரவி வருவதாக சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இந்த வைரஸ் சுவாசக் குழாயைப் பாதிப்பதன் காரணமாக காய்ச்சல், தொண்டை வலி, உடல் வலி, தலைவலி, இருமல், சோர்வு போன்ற அறிகுறிகள் சிறுவர்களிடையே காணப்படும்.

குறித்த அறிகுறிகள் சிறுவர்கள் மத்தியில் காணப்படுமாயின் முறையான மருத்துவ சிகிச்சையைப் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இன்ஃபுளுவென்சா வைரஸ் எளிதில் பரவும் திறன் கொண்டதால் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றவேண்டும் என்றும் சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

## வாள் வைத்திருந்தவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஓக. 21

சுழிபுரம் பகுதியில் வாளுடன் கைதானவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

சுழிபுரம் பெரியபுலோ பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வாளினை மறைத்து வைத்திருப்பதாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் வாள் ஒன்றை கைப்பற்றினர்.

அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 33 வயதான இளைஞர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது எதிர்வரும் 7 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ச-125)

## அதிகரிக்கும் உரமானியம்

யாழ்ப்பாணம், ஓக. 21

நெற்பயிர்ச் செய்கைக்கான உரம் கொள்வனவு செய்வதற்கான உர மானியத்தை அடுத்த வருடம் முதல் 10 ஆயிரம் ரூபாவிலிருந்து 30 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கான யோசனைகள் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அடுத்த இரண்டு பருவங்களில் 55,000 மெற்றிக் தொன் எம்.ஒ.பி உரம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும். உர மானியத்தை 30,000 ரூபாவாக உயர்த்தினால் 30 பில்லியன் ரூபாவே செலவாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

## இலங்கைக்கு வரும் சீனப் பயிற்சிக் கப்பல்


கொழும்பு, ஓக. 21

சீன கடற்படை பயிற்சிக் கப்பலொன்று அதன் பயிற்சிப் பணியின் ஒரு பகுதியாக இலங்கைக்கு வரவுள்ளது.

சீனாவின் தேசியப் பாதுகாப்பு அமைச்சகத்தின் பேச்சாளர் கேர்னல் ஜாங் சியாவோங்கின் அறிக்கையின்படி, இம்மாதம் நடுப்பகுதியிலிருந்து நவம்பர் பிற்பகுதிக்கு இடையில் இந்தப் பயணம் திட்டமிடப்படுள்ளது.

இந்தப் பயணம் இரண்டு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையே பரிமாற்றங்கள், ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நம்பிக்கையை வலுப்படுத்தும் என்றும் எதிர்கால கடல்சார் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு சீனாவின் பரந்த முயற்சியாக அமையும் என்றும் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். (ச-இ)

## யாழ்.போதனாவில் 'ஓ' குருதி தட்டுப்பாடு



யாழ்ப்பாணம், ஓக.21


யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கியில் தற்போது 'ஓ' பொசிட்டிவ் குருதி வகைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், நோயாளர்களுக்குத் தேவையான குருதியை விநியோகிக்க முடியாத நிலை காணப்படுவதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்தவங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வகைக் குருதியை உடையவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கிக்கு நேரடியாக வருகை தந்து குருதிக்கொடை வழங்கி உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்தவங்கிப் பிரிவினர் கேட்டுள்ளனர். (ச-66)

## கொழும்புக்கு வந்தது அமெ.கப்பல்

கொழும்பு, ஓக. 21

அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான 'USS Spruance' என்ற கப்பல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.



இந்தக் கப்பலானது விநியோகம் மற்றும் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

160 மீற்றர் நீளம் கொண்ட இந்தக் கப்பலில் சுமார் 338 பணியாளர்கள் கடமை புரிகின்றனர் என்றும் இலங்கைக் கடற்படை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## தினம் தெரியுமோ?

**காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளுறது தான் அரசியல்வாதியளின்ர கெட்டித்தனம். அதுக்கு முதலில எந்தப் பக்கம் காத்தடிக்குது எண்டு தெரியவேணும். என்னதான் உருட்டுப்பிரட்டில எங்கட அமுல்பேபி அரசியல்வாதி கெட்டிக்காரன் எண்டாலும், இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில ஆற்றை பக்கம் காத்தடிக்கும் எண்டு தெரியாமல் குழம்பிக் கொண்டு நிண்டவர். சஜித் வரேக்க அவரோட ஒட்டிக்கொண்டு திரிஞ்சார், பிறகு ரணில் வரேக்க அவரோடையும் பின்னாலையும் முன்னாலையும் இழுபட்டார். இப்பிடி கொழும்பில இருந்து வாற எல்லா அரசியல்வாதிமாரோடையும் அவர் பின்னுக்கு திரியிறதைப் பார்த்து சனத்துக்கே குழப்பமாப் போட்டுது. கடைசியில, சொப்பன சுந்தரியை ஆர் இப்ப வைச்சிருக்கிறது? எண்ட கேள்விக்கு விடை கிடைச்ச மாதிரி, அமுல்பேபியும் ஆருக்கு சப்போர்ட் பண்ணுறார் எண்டது தெரியவந்திட்டுது. இப்ப காத்தடிக்கிறது ரணிலாருக்குத்தானே? அதால அந்தப் பக்கம் அமுல்பேபி சாய்ஞ்சிட்டார். நல்லகாலத்துக்கு அவரின்ர கட்சியும் ஆளுக்கொரு பக்கமா பிரிஞ்சு கிடக்கிறதால அமுல்பேபியை 'ஏன் இப்பிடி ஒரு முடிவு?' எண்டு கேக்கவும் ஆருமில்லை.**

**ஆனால் , இப்பிடி ரணிலாரின்ர பக்கமா அமுல்பேபி சாய்ஞ்சதுக்கு பின்னால ஒரு டீல் ஓடியிருக்கு எண்டு, அவரின்ர கட்சியில இருந்த தயாசிறி ஜயசேகர மாவனல்லையில முந்தநாள் நடந்த எலக்சன் பரப்புரைக் கூட்டத்தில பகிரங்கமாச் சொல்லியிருக்கிறார்.**

**' நான் யாழ்ப்பாணம் வரேக்க , எனக்குத்தான் நீங்கள் சப்போர்ட் எண்டதை பப்ளிக்கில அறிவிக்கோணும். இல்லாட்டி உங்களுக்கு தந்த பார்லைசென்ஸ் எல்லாத்தையும் பிடுங்கிப் போடுவன்' எண்டு ஜனாதிபதி சொன்னதால தான் சஜித்தை விட்டிட்டு ரணிலாரின்ர பக்கம் ஓடிப்போய் அமுல்பேபி ஒட்டிட்டார்' எண்டதுதான் தயாசிறி சொன்னதின்ர சாராம்சம். எலக்சன் காலத்தில இப்பிடியெல்லாம் எதிர்க்கன்னைக்குப் போறவையைப் பற்றி கதைக்கிறது சகஜம் தான். ஆனால் அமுல் பேபியைப் பற்றி யாழ்ப்பாணத்தில இப்பிடிக் கதைச்சால் அதை வைச்சு கொஞ்ச வாக்குகளை சஜித் அணி பொறுக்கலாம். ஆனால் அமுல்பேபிக்கு சம்பந்தமில்லாத மாவனல்லையில போய் அவரைப் பற்றி அவதூறு சொல்லவேண்டிய அவசியம் தயாசிறிக்கு இல்லைத் தானே.**

**தயாசிறி இப்பிடி விசயத்தைப் போட்டுடைக்க முதலேயே சாடைமாடையா அமுல்பேபியாருக்கு பார் லைசென்ஸ் குடுபட்டது பற்றி கதையள் வந்ததுதான். ஆனால் பினாமிப் பெயருகளில அந்த லைசென்ஸை ஆள் எடுத்ததால அதை ஆராலையும் உறுதிப்படுத்திச் சொல்லேலாமல் போட்டுது. இப்ப பாம்பின்ர காலை அறிஞ்ச இன்னொரு பாம்பு விசத்துக்குப் பதிலா விசயத்தைக் கக்கிப்போட்டுது. இப்பிடி பார் லைசென்ஸை வாங்கிக் குவிச்சு, எங்கட யாழ்ப்பாணத்துப் பெடியளை பியருக்குள்ளையும், சாராயத்துக்கையும் குளிக்க வாக்கிறதுதான் அமுல் பேபியின்ர பாழாப் போன கனவு போல?**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிகளை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை!

## சிகை ஒப்பனையாளர் கூ. ச. தலைவர் தெரிவிப்பு!



**யாழ்ப்பாணம், ஓக.21**

**யாப்பு விதிமுறைகளை மீறி செயற்படும் அங்கத்தவர்களின் நிலையங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தென்மராட்சி சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சி.கேசவன் தெரிவித்துள்ளார்.**

தென்மராட்சி சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகத்தெரிவு யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தலைவர் தலைமையில் கொடிகாமம் பிரதேசசபை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போது சங்க அங்கத்தவர்களால் சி.கேசவன் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவர் கருத்து தெரிவிக்கையில், கடந்த காலங்களில் சில அங்கத்தவர்கள் சங்க யாப்பு விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை எனவும், இனிவரும் காலங்களில் சங்க யாப்பு விதிமுறைகளை கடைப்பிடித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் ஒத்துழைக்க மறுக்கும் அங்கத்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். (ரி)



யாழ்ப்பாணத்தில்

# ரணிலுக்கு ஆதரவுகோரி பரப்புரையில் விஜயகலா

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு கோரி யாழ் மாவட்டத்தில் தேர்தல் பரப்புரை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் தலைமையிலான குழு நெடுந்தீவுக்குப் பயணம் மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான தேர்தல் பரப்புரையை மேற்கொண்டனர். நயினாதீவு, அனலைதீவு பகுதிகளில் மக்களைச் சந்தித்து கலந்துரையாடியதோடு துண்டறிக்கைகளையும் விநியோகித்தனர். (ச-27)

# 'ஏசி' அறைக்குள் கஞ்சாத்தோட்டம்

## இருவர் கைது

கொழும்பு, ஓக.21

மாலம்பே, பிட்டுகல கஹந்தோட்டை வீதியில் இரண்டு மாடி வீடொன்றில் பராமரிக்கப்பட்ட கஞ்சாத் தோட்டமொன்றை மேல் மாகாண தெற்கு மாவட்ட குற்றப்பிரிவு அதிகாரிகள் சுற்றிவளைத்துள்ளனர்.

வீட்டின் கீழ் தளத்தில் உள்ள அறையில் குளிரூட்டப்பட்ட நிலையில், 174 கஞ்சா செடிகள் வளர்க்கப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றிவளைப்பின் போது, சந்தேகநபர் ஒருவர் குஷ் போதைப் பொருளை பொதி செய்த வண்ணம் இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. கண்டுபிடிக்கப்பட்ட குஷ் போதைப்பொருளின் பெறுமதி சுமார் பத்து கோடி ரூபா எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். தேயிலையை பொதி செய்யும் நிலையமாக பராமரிக்கப்பட்டு வந்த இந்த வீடு வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## வேலைக்கு ஆள் தேவை

சாவகச்சேரி கெருடாவிலில் அமைந்துள்ள மனோகரா வெதுப்பகத்திற்கு போறணை வேலை தெரிந்த ஆள் தேவை.

தொடர்பு: 076 158 0408

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 06 . 1950



மறைவு 20 . 08 . 2024

### அமரர் திருமதி சிவலிங்கம் கலைவாணி

வேலணை மேற்கு சிற்பனையை பிறப்பிடமாகவும் இல 28/4 நந்தாவில் ஒழுங்கை, சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கலைவாணி அவர்கள் நேற்றைய தினம் (20.08.2024) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் அமரர் சிவலிங்கத்தின் அன்புத் துணைவியாரும் காலஞ்சென்ற உமாதேவி, ஸ்ரீதேவி, ஸ்ரீதரன் (கனடா), ஸ்ரீரஞ்சனி (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் வலிகாம கல்வி வலயம்), ஸ்ரீமாலதி (பிரான்ஸ்), ஸ்ரீபஞ்சலிங்கம் (வைத்தியர்-அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கனகலிங்கம், இராசலிங்கம், யோகலிங்கம் (விஜிதா அரிசி ஆலை), மகேந்திரராசா, இராசகுலதர்மலட்சுமி, குகராசா காலஞ்சென்ற கலாதரன் ஆகியோரின் மைத்துனியும், அசோக்குமார் (உதவி உரித்து புலனாய்வு உத்தியோகத்தர், காணி உரித்து நிருணயத் திணைக்களம், யாழ்ப்பாணம், மேனாள் பிரதேசசபை உறுப்பினர், வேலணை பிரதேசசபை), அச்சுதன், அருட்சுதன் (ஆசிரியர் யா/வேலணை மத்திய கல்லூரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிலானி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை), துவாரகா, அபிரா (ஆசிரியர் யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தருணிகன், தரணிகா, யதீரா, கவின்ஷா, ஆதீரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.08.2024) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு தற்போதய வதிவிடத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக வேலணை மேற்கு அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

சி. அசோக்குமார் (மகன்) - 0773343983
சி. அச்சுதன் (மகன்) - 0767148061
சி. அருட்சுதன் (மகன்) - 0779361331
0778834363

28/4 நந்தாவில் ஒழுங்கை
சம்பியன் வீதி,
கொக்குவில் கிழக்கு.

(CS 1183) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 02 . 1951



மறைவு 20 . 08 . 2024

### திருமதி சொக்கநாதன் சொர்ணதேவி

மல்லாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொக்கநாதன் சொர்ணதேவி அவர்கள் நேற்று (20.08.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகராயர்-ராமசிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான கனகராயர்-செல்வநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சொக்கநாதனின் (தபாலதிபர்), அன்பு மனைவியும் காலஞ்சென்ற சறோஜினிதேவி, மயூரநாதன், சுசிலாதேவி ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஸ்ரீரமனா (லண்டன்), பிரகாமி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவநேசன், சுபாங்கினி ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சிகா, கர்சிகா, லகாரிக்கா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2024) புதன்கிழமை அவரது இல்லத்தில் (மல்லாகம்) பி.ப 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

[illegible] பாடசாலை வீதி,
மல்லாகம்.

(CS 1184) V-1

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் உயர்வின் அளவை நிர்ணயிப்பது உங்கள் கெட்டிக்காரத்தனம் அல்ல. உங்களுடைய மனப்பாங்கே.

- ஜிக் ஜிக்லர்

# யாழ். பல்கலைக்கழக பொன்விழா ஏன் கொண்டாடவேண்டும்?

இ.சர்வேஸ்வரா
*உயிரியல் விஞ்ஞானம் (30ஆவது அணி)*
*விஞ்ஞானபீடம்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*



ஈழத்தமிழர்களின் அடையாளமாகத் திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவ்வருடம் தனது ஐம்பதாவது ஆண்டைப் பூர்த்தி செய்கிறது. பல்கலைக்கழகத்துடன் இணைந்து அதேகாலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞானபீடமும், மனிதப் பண்பியல் பீடம் என ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் கலைப்பீடம் என பெயர் மாற்றம்பெற்ற பீடமும் பொன்விழா ஆண்டை எட்டியுள்ளன. கடந்து வந்த ஐம்பது ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடம், கலைப்பீடங்களின் பயணம் சாதாரணமானது அல்ல. இலங்கையின் ஏனைய அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு வாய்த்த வாய்ப்புகள் போல யாழ். பல்கலைக்கழகத்துக்கு வாய்த்ததில்லை. அது போன்றே யாழ்.பல்கலைக்கழகம் சந்தித்த சவால்களைப் போல ஏனைய பல்கலைக்கழகங்கள் சந்தித்ததும் இல்லை. இருந்தும் வாய்ப்புகளின் பற்றாக்குறை மற்றும் சவால்களின் செறிவு என்பவற்றுக்கு இடையில் யாழ். பல்கலைக்கழகமும் அதனோடு இணைந்த பீடங்களும் சாதித்தவை ஏராளம். குறிப்பாக பெரு இடப்பெயர்வுகள் மற்றும் போர்க்கால அனர்த்தங்கள் நிகழ்ந்தபோது எந்தவொரு கட்டத்திலும் பல்கலைக்கழகம் மூடப்படவில்லை. 1974ஆம் ஆண்டுக்குப் பின்னர் உயர்தரப் பரீட்சை எழுதிய அத்தனை அணியினருக்கும் பல்கலைக்கழக கல்வியைத் தொடரும் வாய்ப்பு யாழ். பல்கலையில் கிட்டியது.

### இன விடுதலையுடன் இரண்டறக் கலந்தது

1974ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடும் அதன் பின்னரான அசம்பாவிதங்களும் ஈழத்தமிழர்கள் மத்தியில் அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்த சூழலில் 1974ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கைப் பல்கலைக்கழத்தின் வளாகமாக யாழ். பல்கலைக்கழகத்துக்கான முதல் அடி எடுக்கப்படுகின்றது. பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட அதே காலப்பகுதியில் தமிழர்களின் இனவிடுதலைப் போராட்ட நகர்வுகளும் ஆரம்பிக்கத் தொடங்கின. இனவிடுதலைப் போரும் பல்கலைக்கழகமும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து நகர்ந்தமையால் இரண்டினது நகர்வுகளினதும் வீச்சும் வீழ்ச்சியும் தவிர்க்க முடியாதபடி ஒன்றின் தாக்கம் மற்றொன்றின் மீதும் இணைக்கப்பட்டிருந்தன.

இதனால் யாழ்.பல்கலைக்கழகமும் அதன் பீடங்களும் சந்தித்த இழப்புகள் ஏராளமானவை. அநியாயமான உயிர் இழப்புகள், பெருமளவிலான சொத்து இழப்புகள், புலமையாளர்களின் புலப்பெயர்வு, இரட்டை நிர்வாக சுழலுக்குள் தீர்க்கமான தீர்மானங்களை எடுக்கமுடியாத பலவீனம், மாணவர் பல்வகைமையில் குறைபாடுகள், வளப்பற்றாக்குறை என ஒரு வளரவேண்டிய பல்கலைக்கழகம் தன் பேரேழுச்சிக்காலத்தில் சந்திக்கக்கூடாத சவால்கள் அனைத்தையும் சந்தித்தது. இருந்தும் அது நிமிர்வுடன் இருந்தது.

இந்த 50 ஆண்டுகளில் ஏறக்குறைய 35 வருடங்கள் போரும் கல்வியுமாக கடந்த வருடங்கள். பின்னரான 15 வருடங்கள் போருக்குப் பின்னான களமும் கல்வியும் என நகர்ந்தவை. 2009ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற போரில் பாதிக்கப்பட்ட அங்கவீனமுற்ற உளத்தாக்கத்துக்குள்ளான தலைமுறையின் கடைசி அணி மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு வர இன்னும் ஐந்தாண்டுகள் இருக்கின்றன. எனவே 55 ஆண்டுகள் போர்ச் சூழலுடனும் அதன் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கத்துடனுமே பல்கலைக்கழகமும் அதன் பீடங்களும் நகரவேண்டியுள்ளது.

### அசாத்திய எழுச்சி

2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிர்வாகப் பரப்பின் வீச்சிலும் நிலப்பரப்பின் வீச்சிலும் இலங்கையின் முதல் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்திருந்தது. இது இலங்கையின் பாரம்பரியப் பல்கலைக்கழகம் எனக் கருதப்படும் பேராதனைப் பல்கலைக்கழகத்தைத் தாண்டிய பெருவளர்ச்சி. யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த பிரதான வளாகம், மருதனார்மடம், கைதடி, கிளிநொச்சியில் அமைந்திருந்த கற்கைப்புலங்கள் மற்றும் வவுனியா வளாகம் என ஒட்டுமொத்த நிலப்பரப்பின் அளவில் முதல் நிலை பல்கலைக்கழகம். பீடங்களின் எண்ணிக்கையில் அதிகளவான பீடங்களையும் அதனால் விளைந்த அதிக எண்ணிக்கையானோரைக் கொண்ட பேரவையையும் கொண்ட பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தது யாழ். பல்கலைக்கழகம். அதனைவிட இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றில் ஒரேநேரத்தில் இரண்டு தொழில்நுட்பக் கற்கைப் பீடங்கள் யாழ். பல்கலைக்கழக ஆளுகைக்குள் இருந்தன. இவையெல்லாம் காலத்தால்விளையும் அதிசயங்கள். இத்தகைய அதிசயங்களையும் அசாத்தியங்களையும் சாத்தியமாக்கிய எமது ஞானத்தாயின் ஐம்பது அகவையைக் கொண்டாடுவது என்பது எவ்வளவு முக்கியமானது.

வளப்பற்றாக்குறை, தொடர்பாடல் நெருக்கடிகள், போக்குவரத்துச் சவால்கள், போர்க்கால அனர்த்தங்கள், பொருளாதாரத் தடைகள் என்பவற்றைத் தாங்கியும் சமாளித்தும் அடைந்த அடைவுகளின் பெறுமதியை எடைபோட்டு பிரமிக்கும் காலம். அதுமட்டுமன்றி இன்று எமக்கிருக்கும் வளங்கள் அன்றைய போர்க் காலச் சூழலில் வாழ்ந்தோர் கைகளில் இருந்திருந்தால் அவர்கள் இன்னும் எத்தனை விடயங்களைச் சாதித்திருப்பார்கள் என்பதை அதிசயத்துடன் கற்பனை செய்து பார்க்கும் காலம். அதற்குமப்பால் இன்று நமக்கிருக்கும் வளங்கள் மற்றும் வாய்ப்புகளுடன் நாம் எதைச் சாதித்திருக்கிறோம் என்பதை அளவீடு செய்து தன்நிறைவு கொள்ளவோ அல்லது சுயபரிசோதனை செய்யவோ வாய்த்த காலம் இந்தப் பொன்விழாக்காலம். ஐம்பதாண்டுகளைக் கடக்கும் எந்த நிறுவனமோ அல்லது தனிமனிதரோ தான் சமூகத்துக்கு ஆற்றவேண்டிய அனைத்துக் கடமைகளையும் ஆற்றியிருக்கவேண்டும். அல்லது அந்தக் கடமைகள் நிறைவேற்றப்படுகின்றமைக்கான அடித்தளங்களை உருவாக்கியிருக்கவேண்டும். யாழ். பல்கலைக்கழகமும் அதன் பொன்விழாப் பீடங்களான விஞ்ஞானபீடமும் கலைப்பீடமும் இந்தக் கடமைகளை ஆற்றியிருக்கின்றன என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. உதாரணமாக யாழ். பல்கலைக்கழகம் அமைந்துள்ள பிராந்திய தலைமைத்துவம் இப்போது யாழ். பல்கலைக்கழகம் பிரசவித்த பட்டதாரிகளின் கைகளிலேயேயுள்ளது. அவர்கள் எடுக்கும் தீர்மானங்கள் தான் பிராந்தியத்தின் வளர்ச்சியையும் எழுச்சியையும் தீர்மானிக்கும் காரணிகள் எனலாம். நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண ஆளுநர், யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், வடக்கின் மாவட்ட செயலர்கள், யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், வட மாகாண அமைச்சுகளின் செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், பீடாதிபதிகள், கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், வங்கிகளின் உயர்நிலை அதிகாரிகள் என இப்பட்டியல் நீள்கின்றது.

வளப்பற்றாக்குறை, தொடர்பாடல் நெருக்கடிகள், போக்குவரத்துச் சவால்கள், போர்க்கால அனர்த்தங்கள், பொரு ளாதாரத் தடைகள் என்புவற்றை தாங்கியும் சமாளித்தும் அடைந்த அடைவுகளின் பெறுமதியை எடைபோட்டு பிரமிக்கும் காலம்.
அதுமட்டுமன்றி இன்று எமக்கிருக்கும் வளங்கள் அன்றைய போர் கால சூழலில் வாழ்ந்தோர் கைகளில் இருந்திருந்தால் அவர்கள் இன்னும் எத்தனை விடயங்களைச் சாதித்திருப்பார்கள் என்பதை அதிசயத்துடன் கற்பனை செய்து பார்க்கும் காலம். அதற்குமப்பால் இன்று நமக்கிருக்கும் வளங்கள் மற்றும் வாய்ப்புக்களுடன் நாம் எந்தைச் சாதித்திருக்கிறோம் என்பதை அளவீடு செய்து தன்நிறைவு கொள்ளவோ அல்லது சுயபரிசோதனை செய்யவோ வாய்த்த காலம் இந்த பொன்விழாக்காலம்.

10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆசிரியர்களின் நிலை

## வாய்க்கு பூட்டு கைக்கு விலங்கு



செபஸ்டியன் தர்சினி
*இரண்டாம் வருட மாணவி,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்.*

எவ்வாறு ஒரு சிற்பி பாறையைத் தகர்த்து சிற்பமாக வடிவமைக்கின்றானோ அதைபோலதான் மாணவ கண்மணிகளை ஆசிரியர்கள் கல்வியைப் போதித்து அறிவாற்றல் மிக்கவர்களாக ஆக்குகின்றனர். எண்ணங்கள், சிந்தனைகள், நோக்கங்கள் எவ்வளவு சிறந்தனவாக இருப்பினும், நிர்வாகம் எவ்வளவு ஆற்றல் வாய்ந்ததாக இருப்பினும், கற்பதற்கான வளங்கள் ஏராளமாகவும், காலத்துக்கு ஏற்றனவாகவும் இருப்பினும் அவற்றால் மாணவர்கள் அடையும் பயன் ஆசிரியர்களைப் பொறுத்தே ஆகும்.

கற்பித்தல் என்பது உன்னதமான தொழிலாகும். நாளைய சிறந்த பிரஜைகளை உருவாக்குவதில் ஆசிரியர்கள் இன்றிலிருந்து உழைக்க வேண்டியுள்ளது. அதற்காகத் தங்களுடைய வாழ்நாளில் பாதியை அர்ப்பணிக்கின்றனர். குழந்தையானது தனது குடும்பத்துக்கு வெளியே பரிவும் அன்பும் கொள்ளும் நபராக ஆசிரியரே காணப்படுகின்றார். ஒவ்வொரு ஆசிரியரும் மாணவர்களைத் தன் பிள்ளைகள்போலே கருதுவர். முன்னைய காலங்களில் ஆசிரியர்கள் மீது மாணவர்களுக்கு பக்தி, மரியாதை, பயம் முதலியன மேலோங்கி காணப்பட்டன. ஆசிரியர்களை வழிகாட்டிகளாகவும், முன்மாதிரியாகவும் மாணவர்கள் எண்ணிய காலம் அது. ஆனால், இன்றோ தொடக்கக்கல்வி முதல் கல்லூரிக் கல்வி வரை மாணவ மாணவிகளுக்கு அஞ்சும் துர்பாக்கிய நிலைக்கு ஆசிரியர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதாவது மாணவர்கள் ஆசிரியர்களை மதிப்பவர்களாக அன்றி அடக்குபவர்களாகவே திகழ்கின்றனர்.

### ஆபத்தில் ஆசிரியத்துவம்

ஒரு பிள்ளை முன்னேறி போவதை சகித்துக் கொள்ளாமல் தூற்றி, வளர்ச்சியை தடுக்க முற்படும் இச்சமுதாயத்தின் மத்தியிலே தன் சொந்த உழைப்பை பெருக்கி தன்னைக் காட்டிலும் தன் மாணவன் உயரச் செல்ல வேண்டும் என்ற கள்ளங்கபடம் இல்லாத உள்ளம் கொண்டவர்கள் ஆசிரியர்கள். ஆனால் அத்தகைய ஆசிரியர்கள், மாணவர்கள் கண்முன்னே தவறு செய்தாலும் கூட அதனைத் தட்டிக்கேட்க முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மாணவர்களின் நலன்கருதி கண்டிக்கும் ஆசிரியர்களின் நிகழ்கால வாழ்வு அதோகதி நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகிறது. தனது பிள்ளைகள் செய்யும் தவறைப் பெற்றோரும் கண்டிப்பதில்லை, அதனைக் கண்டிக்கும் ஆசிரியர்களையும் விட்டு வைப்பதில்லை. ஏன் எனது மகனை அடித்தீர்? கண்டித்தீர்? என்று ஆசிரியர் மீது பொலிஸ் நிலையத்தில் புகாரளிக்கின்றனர். இது ஒருபுறம் இருக்க அதனையும் மீறி ஆசிரியர் மாணவனைக் கண்டித்தால் ஆசிரியரைத் திரும்பத் தாக்கும் மாணவச் சமூகமும் இன்று உருவாகியிருக்கின்றது.

இந்த நடத்தைப் பிறழ்வுக்கு முழுதாகப் பெற்றோரையும் குறைகூறி விடமுடியாது. சில பெற்றோர் பிள்ளைகளை கண்டிப்புடனே வளர்க்கின்றனர். அச்சு, காட்சி, ஊடகங்கள், வளர்ந்துவரும் நவீன தொழில்நுட்பங்கள், தொலைபேசிகள், இணையங்கள் மற்றும் போதைப் பொருள் பாவனை, அத்தோடு நலிவடைந்து போன மனித மதிப்புகள், அதிநுகர்வுக் கலாசார நோக்குகள் போன்றவை பிஞ்சு உள்ளங்களை பெருமளவில் நஞ்சாக்கி வருவது கண்கூடு. ஒட்டுமொத்த மாணவர்களும் இந்நிலைக்கு உட்பட்டு உள்ளனர் என்று கூறிவிட முடியாது. நல்ல நெல்மணிகளாய் மாணவ கண்மணிகள் பல்வேறிடங்களில் அறியக் கிடைக்கின்றனர் என்பதையும் மறுப்பதிற்கில்லை. ஆனால், அனைத்து மாணவர்களையும் நல்ல நெல்மணிகளாக்க ஆசிரியர்களால் மட்டுமேமுடியும்.

தாம் பணியாற்றும் பள்ளியை முழுத்தேர்ச்சி பெற வைக்கவும் தேர்ச்சிக்குரிய குறைந்த மதிப்பெண்கள் அடைவை எட்டாத மாணவ மாணவியர் மீது தனிக்கவனம் செலுத்தி, சிறப்பு வகுப்புகள் நடத்தி தேர்ச்சிபெற வைக்கவும் முயலும் ஆற்றல்மிக்க ஆசிரியர்கள் படும்பாடுகள் சொல்லில் அடங்காதவை. ஆனால், அவ்வாறான அளப்பெரும் பணியாற்றும் ஆசிரியத்துவத்துக்கு அவமானம் ஏற்படுத்தும் சில அற்ப ஜீவன்களும் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இதனால் முழு ஆசிரிய சமுதாயமுமே கீழ்நிலைப்படுத்தப்படுகின்றது. இன்றைய காலத்தில் ஆசிரியராக இருப்பது மிகச் சவாலான பணியாகக் காணப்படுகின்றது.

### ஆசிரியம் எனும் அறம்

ஆசிரியரின் சொல்லிலும் செயலிலும் ஒவ்வொரு அர்த்தமும், மாணவர்களின் எதிர்கால வாழ்வும் தங்கியுள்ளது பெரும்பாலான மாணவர்கள் உணர்வதில்லை. மாணவர்கள் செய்யும் தவறுகளை சுட்டிக் காட்டுவதும், அதனை மீண்டும் செய்யாதவாறு நல்வழிப்படுத்தவும் இன்று ஆசிரியர்களுக்கு பெரும் சவாலாகிவிட்டது. இன்றைய தலைமுறையின் வெற்றிக்கு அன்றைய ஆசிரியர்களின் கண்டிப்பும் பெற்றோரின் அரவணைப்புடன் கூடிய கண்காணிப்புமே காரணம் எனலாம். ஆனால் எதிர்கால தலைமுறையை சிறந்ததாக மாற்றுவதற்கு இன்றைய ஆசிரியர்களுக்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. பெற்றோரின் அன்பினையும் ஆசிரியரின் கண்டிப்பினையும் புரிந்துகொள்ளாத இந்த மாணவர் சமூகத்தின் எதிர்கால நிலை என்னவாகப்போகிறது? ஆசிரியர்களின் கரங்கள் இன்று கட்டப்படுமானால் ஒழுக்கமிகு நல்ல மனிதர்களாக மாணவர்களை உருவாக்குவது எவ்வாறு சாத்தியமாகும்? திசைமாறிப் பயணித்துக் கொண்டிருக்கும் மாணவ சமுதாயத்தை மீளவும் நல்வழிக்கு கொண்டுவர பெற்றோர், சமுதாயம், அரசாங்கம் மற்றும் ஊடகங்கள் ஆகியவை ஆசிரியர்களுடன் கைக்கோர்க்கவேண்டும். இல்லையேல் மாணவர்களின் எதிர்காலம் இருளானதாக மாறிவிடும். ■

# யாழ்.பல்கலைக்கழக....

*(தொடர்ச்சி)*

### புலத்திலும் மைந்தர்கள்

இந்தப் பட்டியல் தாண்டி நிலத்துக்கு வெளியே புலத்திலும் யாழ். பல்கலைக்கழக பட்டதாரிகளின் ஆளுமை நாடுகள் தோறும் பரவிக்கிடக்கின்றது. இத்தகையவர்கள் அத்தனை பேரையும் ஒற்றை அடையாளத்தினுள் ஒன்று சேர்ப்பதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் மகுடம் மட்டுமே பொருத்தமானது. பொன்விழா என்பது வெறுமனே உண்டு களித்து கூடிக் கலையும் ஒரு நிகழ்வல்ல. பின்னர் நிகழப்போகும் பெருமாற்றங்களுக்கான ஆரம்பப் புள்ளியையும், உத்வேகத்தையும் வழங்கும் இயங்குதளத்தை கட்டமைக்கும் புள்ளி. இந்தப் புள்ளியை வினைத்திறனாகப் பயன் கொள்ளும் நிறுவனம் தன் இலட்சிய நோக்குகளை அடைய அடுத்த பத்தாண்டு போதுமானது. இதனாலேயே ஐம்பது தாண்டி பத்தாண்டுகளில் அறுபதில் மீண்டும் வைரவிழா என ஒரு பெருவிழா வருகிறது. யாழ். பல்கலைக்கழகமும் அதன் விஞ்ஞான மற்றும் கலைப்பீடங்களும் தங்கள் வைரவிழாவைக் கொண்டாடும் போது பொன்விழா விளைத்த அறுவடைகளின் பயனை விதந்துரைக்கவேண்டும். அதற்கான வழிகளைத் திறப்பதாக பொன்விழா நிகழ்வுகள் அமையவேண்டும்.

இன்று இலங்கைத் தேசத்தின் பொருளாதாரச் செல்நெறி சவாலுக்குரியதாக இருக்கின்றது. இந்தச் சவாலில் இருந்து மீள ஆகக் குறைந்தது ஒரு தசாப்தம் வேண்டும் என்பது பொருளாதார வல்லுனர்களின் கணிப்பு. அதுவும் பொருத்தமான தேசத்தலைமைத்துவம் அமைந்தாலே சாத்தியமானது. இந்தநிலையில் அடுத்துவரும் பத்தாண்டுகளும் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடுகள் என்பன வெறுமனே நடைமுறைச் செலவீனங்களைச் சமாளிக்கவே போதுமானதாகவிருக்கும். மூலதனச் செலவீனங்களுக்கான ஒதுக்கீடுகளும் முதலீடுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளும் மிகக் குறைவானதாகவே இருக்கும். இந்தச் சவாலான சூழலால் பெரும் இடரினைச் சந்திக்கவுள்ளவை அரசாங்கப் பல்கலைக்கழகங்கள் போன்ற மனிதவள உற்பத்தி மையங்களே. யாழ். பல்கலைக்கழகமும் விஞ்ஞான பீடமும் சந்திக்கும் பொன்விழாவும் அவற்றோடு இணைந்த சமூகத்தின் ஒன்றுபட்ட திரட்சியும் காலக்கனதி மிக்கவை. இப்போது மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் விஞ்ஞான பீடத்தின் ஐம்பது ஆண்டுகாலப் பயணத்தின் பொறுப்புதாரர்கள் அனைவரும் ஏதோ ஒரு தளத்தில் ஒன்று சேர்ந்திருக்கின்றார்கள். இந்த ஒன்று சேர்ந்த தளம் என்பது ஒன்று நூறாகி, நூறு ஆயிரமாகி விரியவேண்டும். இந்த விரிவு பீடத்தின் பொதுநன்மை கருதிச் சிந்திக்கும் ஒரு தலைமுறைக் கலவையை உருவாக்கும். அந்தக் கலவை பாய்ச்சும் உரத்தில் விஞ்ஞான பீடப்பயிர் செழித்து வளரும். இப் பயிரின் விளைச்சலினால் நம் சமூகத்தின் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கிடைக்கவேண்டும். தன்முனைப்புகளைத் தூரவிலக்கி நாம் எனும் ஒற்றுமைப் பண்புக்குள் நுழைந்து ஓராயிரம் காரியங்கள் ஆற்ற நமக்கொரு காலம் வாய்த்திருக்கின்றது. அதனை உரிய வகையில் பயன்கொண்டால் இனமும் வாழும், நாடும் வளம் பெறும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலித்தீன் அற்ற சூழல் நல்லூரில் விழிப்புணர்வு



யாழ்ப்பாணம், ஓக. 21
மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏற்பாட்டில் 'பொலித்தீன் அற்ற சூழல்' என்ற தொனிப்பொருளில் நல்லூர் ஆலய சூழலில் விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.
நல்லூர் ஆலய வருடாந்த பெருவிழாவுக்கு வந்து செல்லும் போது பொலித்தீன் பைகளில் பொருட்களை கொண்டுசெல்லும் பக்தர்களுக்கு துணியால் தயாரிக்கப்பட்ட பைகளை வழங்கி பொலித்தீன் பைகள் பெற்றுக்கொள்ளப்படுகிறது. மாணவர்களிடமும் பொலித்தீன் பயன்பாட்டுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் குறித்த செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
நல்லூர் ஆலய சூழலில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் குறித்த விழிப்புணர்வு செயற்பாடு தொடர்ந்து 10 தினங்கள் முன்னெடுக்கப்பட உள்ளது. (ஒ-100)

*வடக்கில் முதல் தடவையாக*

## பெண் மாணவ சிப்பாய்களால் 'ஸ் ரீட்லைன்' அணிவகுப்பு மரியாதை



யாழ்ப்பாணம், ஓக. 21
வடக்கு மாகாண விளையாட்டுவிழாவில் விருந்தினர்களுக்கான அணிவகுப்பு மரியாதை பெண் மாணவ சிப்பாய்களால் முதல் தடவையாக நேற்று வழங்கப்பட்டது.
வடமாகாண கல்வித்திணைக்களத்தின் விளையாட்டு விழா யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நேற்று நடைபெற்றது.
பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து கொண்டதுடன், வடமாகாண கல்வியமைச்சின் செயலர் பற்றிக் டிறைஞ்சன், வடமாகாண கல்விப்பணிப்பாளர் க.பிரட்லி, 20ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி லெப். கேணல் ரத்னவீர மற்றும் துறை சார் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.
விருந்தினர்களுக்கான அணிவகுப்பு மரியாதை 20ஆவது படைப்பிரிவின் பெண் மாணவ சிப்பாய்களால் வழங்கப்பட்டது.
வட மாகாணத்தில் பெண் மாணவ சிப்பாய்களால் முதல் முதலாக 'ஸ் ரீட்லைன்' அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்ட சந்தர்ப்பம் இதுவாகும். (ஒ-இ)

### ஜனாதிபதியின் ஆலோசகர்களால்

## தேர்தல் விதிமீறல்கள்

கொழும்பு, ஓக. 21
ஜனாதிபதிக்கு இரண்டு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டிருப்பது தேர்தல் விதி மீறல் என பவ்ரல் சுட்டிக்காட்டியுள்ளது. இவர்களிருவரும் ஜனாதிபதிக்கு ஆதரவாகப் பரப்புரை செய்கின்றனர். அரச வாகனங்களை பயன்படுத்துகின்றனர். இதனால் மக்களின் புணம் முறைகேடாக பயன்படுத்தப்படுகின்றது என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.
அமைச்சர்களாக இருந்த ஹரின் மற்றும் மனுஷ இருவரும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிழந்துள்ள நிலையிலேயே ஜனாதிபதியின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஒ-6)

## 'ஈ விரட்டும்'பொன்சேகா

கொழும்பு, ஓக. 21
இரண்டாவது தடவையாக ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கியுள்ள பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் கூட்டத்தில் ஐம்பதுக்கும் குறைவானோரே கலந்துகொண்டனர்.
சரத் பொன்சேகாவின் முதலாவது பரப்புரைக்கூட்டம் நிக்கரவெட்டி யாவில் நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் ஐம்பதுக்கும் குறைவானோரே கலந்து கொண் டனர். (ஒ-6)


## பெயர் மாற்றம்

அறுவைக்குண்டு, நானாட்டான், மன்னாரில் வதியும் அருமைலோகன் தமிழ்மதி ஆகிய நான் எனது பெயரை அருமைலோகன் தனுசியா பாத்திமா சுமையா என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் அருமைலோகன் தனுசியா பாத்திமா சுமையா என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

**அருமைலோகன்**
**தனுசியா பாத்திமா சுமையா**

(CS/28292) J-1



# INVITATION FOR BID (2024/01)

## DISTRICT GENERAL HOSPITAL KILINOCHCHI.

1. The **Chairman, Regional Procurement Committee, District General Hospital, Kilinochchi** on behalf of the Director District General Hospital, Kilinochchi, invites sealed bids from eligible and qualified bidders for the Construction/Renovation/rehabilitation/refurbishment/ Renovation work described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).** "Bidding will be conducted through National Competitive Bidding Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the **Schedule (Section 5).**
5. Interested bidders may obtain further information from address given below in 6, and inspect the bidding documents at the same place on any working days from 9.00 A.M to 4.00 P.M.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the address given below **From 21.08.2024 until 03.09.2023 from 9.00 A.M to 3.00 P.M upon payment of non-refundable fees as given in below table**. The method of payment should be by cash.

**District General Hospital, A9 Road, Kilinochchi. (T.P: 0212285329, 0212284111, Fax: 0212285327)**

7. Bids (Original and Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, District General Hospital Kilinochchi, A9 Road Kilinochchi** on or before **11.30 A.M on 04.09.2024.** Bid number must be written on the left-hand upper corner of envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, District General Hospital Kilinochchi**, A9 Road Kilinochchi commencing at **10.00 A.M on 28.08.2024.**
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table below.

| **Document Issuing/Purchasing Period** | | **20.08.2024 – 03.09.2024** | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Pre-Bid Conference** | | **28.08.2024** | | | | | |
| **Closing and Opening of Bids** | | **04.09.2024** | | | | | |
| **Bid No** | **Description of Work** | **Estimated Cost /(Rs in millions)** | **Contract Period** | **Required Grade** | **Required Bid Security** | | **Non-refundable fees(Rs.)** |
| | | | | | **Security Amount** | **Validity Period** | |
| NP/DGH/KOC/2024/lin.mini/01 | Creating pathway from existing hospital at DGH Kilinochchi | 3.50 | 60Days | C7 and ,C8 | 35,000.00 | Till 03.11.2024 | 2500.00 |
| NP/DGH/KOC/2024/M/W/04 Stage I | Renovation of Wash room at Ward No – 01 DGH Kilinochchi | 1.70 | 30 Days | C7,C8 and ,C9 | 17,000.00 | Till 03.11.2024 | 2500.00 |
| NP/DGH/KOC/2024/M/W/04 Stage II | Renovation of Wash room at OPD DGH Kilinochchi | 0.80 | 30 Days | C7,C8 and ,C9 | 8,000.00 | Till 03.11.2024 | 2500.00 |

**Chairman**
**Regional Procurement Committee**
**District General Hospital Kilinochchi**

(CR/42955) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல், உளத்தாக்கங்கள் விழிப்புணர்வு யாழில்

யாழ்ப்பாணம், ஓக. 21

காலநிலை மாற்றத்துக்கூடாக உடல், உள ரீதியிலான தாக்கங்கள் எவ்விதமாக இருக்கிறது என்பதற்கான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மாலை நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஹொக்கி அணியுடன் இணைந்து இந்த விழிப்புணர்வு நிகழ்வை காவேரி கலாமன்றம் ஒழுங்குபடுத்தி நடத்தியது.

விளையாட்டு வீரர்கள் உடல் ஆரோக்கியம் தொடர்பான விடயத்தை சமூகத்தில் இருப்பவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பது மிகச் சிறப்பான விடயம். எனினும், விளையாட்டு வீரர்கள் சூழலியல் பார்வையில் அக்கறை உள்ளவர் களாக இருப்பதன் ஊடாக எவ்விதமாக உடல் ஆரோக்கியம் மிக்க ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பமுடியும் என்பதை குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இந்த செயற்பாட்டை காவேரி கலாமன்றம் அறிமுகப்படுத்தியது.

அந்தவகையில் காவேரி கலாமன்றம், இந்த ஓகஸ்ட் மாதத்தில் காலநிலை மாற்றம் உடல், உள, ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக யாழ். மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஹொக்கி அணியினரோடு இணைந்து இந்த ஹொக்கி விளையாட்டுப் போட்டியை வைப்பதற்கூடாக சமூகத்தில் விழிப்புணர்வைஏற்படுத்ததீர்மானித்துள்ளது.

இதனூடாக சமூகத்திலே பல்வேறு நிலைகளில் இருக்கக்கூடிய சமூகமட்ட அமைப்புகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பி, சூழலியல் சார்ந்த விடயங்களில் அதிகமான பங்களிப்புகளை நாம் கொடுக்கவேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தவுள்ளது.

விளையாட்டு வீரர் விளையாட்டு வீரராக மட்டும் அல்லாமல் தனது நாளாந்த செயற்பாடுகளில் எவ்விதமாக சூழலியல் மேம்பாட்டுக்கு பங்களிப்பை செய்யக்கூடும், நடந்து செல்லக்கூடிய இடங்களுக்கு நடந்து செல்கின்ற பொழுது அல்லது சைக்கிளில் செல்கின்ற பொழுது ஒரு விளையாட்டு வீரனாக சூழல் மேம்பாட்டுக்கு தனது பங்களிப்பை கொடுக்கின்றான் அவ்விதமாக தொற்றும், தொற்றா நோய்கள் குறித்த விழிப்புணர்வை தனது குடும்பத்திலும் தனது விளையாட்டு கழகத்துள்ளும் தனது சமூகத்துக்குள்ளும் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற மிகச்சிறந்த ஓர் சமூக விழிப்புணர்வை முன்கொண்டு செல்கின்ற ஓர் ஊடகமாக திகழும். இதை அடிப்படையாகக் கொண்டு காவேரி கலாமன்றம் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. (ஓ-27)

## மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 09 . 1945

இறப்பு 19 . 08 . 2024



### கணேசன் நிர்மலா

(ஓய்வுநிலை ஆசிரியர்- அரியாலை சரஸ்வதி முன்பள்ளி)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசன் நிர்மலா நேற்றுமுன்தினம் (19.08.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பூரணம் தம்பதியினரின் அன்பு மகளும் சகுந்தலா (கொழும்பு), காலஞ்சென்ற பற்குணநாதன், மஞ்சுளா (சுவிஸ்), சியாமளா (கனடா), தர்ஷிலா (ஓய்வுநிலை ஆசிரியர்- யாழ். நல்லூர் மங்கையர்கரசி வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.08.2024) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.22, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்
077 9229075

## 12 வயது மாணவன் ஐஸ் பாவனையால் மருத்துவமனையில்

வவுனியா, ஓக. 21

வவுனியா நகரை அண்டிய பாடசாலையில் கல்வி பயிலும் 12 வயது மாணவன் ஒருவன் உயிர்கொல்லி ஐஸ் போதைப் பொருள் பாவித்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவரது உடல் நிலை தேறிவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

வவுனியா நகரையண்டிய பிரபல பாடசாலையில் தரம் -7 இல் கல்வி பயிலும் 12 வயது மாணவன் ஒருவன் பாடசாலைக்கு முன்பாகவுள்ள கடை ஒன்றின் அருகில் இருந்த ஒதுக்குப் புறமான இடத்துக்குச் சென்றுவிட்டு மீண்டும் பாடசாலைக்குள் சென்றுள்ளான்.

சிறிது நேரத்தில் மாணவன் தொடர்ச்சியாக வாந்தி எடுத்தமையால் பெற்றோருக்கு தெரியப்படுத்தி அவர்கள் ஊடாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

வவுனியா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட மாணவன் தற்போது நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த மாணவன் உயிர்கொல்லி ஐஸ் போதைப் பொருளை பாவித்ததின் காரணமாக இந்த அசம்பாவிதம் ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ-18)

## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 02 . 1947

இறப்பு 20 . 08 . 2024



### வேலாயுதம் நடராஜா

(யாழ். பல நோ. கூ. சங்க ஊழியர்)

அன்னார் வேலாயுதம் நாகலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் சண்முகராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யமுனா, பூமணி, சுப்பிரமணியம் (சுவிஸ்), காலஞ்சென்ற பரந்தாமன் மற்றும் மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், நளாயினி, கோபிநாத் (மின்சார சபை ஊழியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயசந்திரன், சந்திரிக்கா, தமயந்தியின் அன்பு மாமனாரும், சங்கீதா, சஞ்சயன் ஆகியோரின் பெரியப்பாவும் ரித்திகன், சாதுர்யன், சக்ஷிகா, தியாரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2024) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
076 850 1930

(CS/1185)-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 03 . 1936

இறப்பு 20 . 08 . 2024



### திருமதி சிவநாயகி அற்புதராஜா

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய், முருகன் வீதி, மற்றும் கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவநாயகி அற்புதராஜா 20.08.2024 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சின்னம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற அற்புதராஜாவின் (Asbestos Cement Industries) ஆருயிர் மனைவியும் சுதர்சன், காலஞ்சென்ற சுபோதினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுதர்சினியின் அன்பு மாமியாரும் அமரர்களான சேனாதிராஜா, செல்வநாயகி, தியாகராஜா, நடராஜா, தங்கராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஹரிணியின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (21.08.2024) கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 8 மணிமுதல் பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் 2.30 மணியளவில் ஆரம்பமாகி கல்கிசை பொதுமயானத்தில் 5 மணியளவில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:
குடும்பத்தினர் 077 6008785 (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1st Year Remembrance

Birth
20 . 09 . 1938



Demise
01 . 09 . 2023

**Late Mr. Sinnathambi Sathasivam**

A light is from our household gone
A voice We loved is stilled
A place is vacant in our home
Which never can be filled
God gave us a beautiful father
A father who never grew old
You were always there
with a helping hand
Help us now to accept his plan
We miss you now, our hearts are sore,
As time goes by, we miss you more
Your loving smile, your gentle face
No one can take our "Father's place"
May the choirs of the angels receive you
and may you have rest
and peace everlasting Amen

அன்னாரின் முதலாம் ஆண்டுக் கிரியைகள் இன்று (21.08.2024) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்றைய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும்
**இத்தகவலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**குறுமுனி அம்மன் கோவில் வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.**

(CS/55982) J-1

**குடும்பத்தினர்.**

# மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
25 . 11 . 1945



உதிர்வு
24 . 08 . 2021

## அமரர் வல்லிபுரம் கந்தசாமி

**திதி: அபரபக்க துதியை (21.08.2024)**

மூன்றாண்டு ஓடியது
மூவாயிரம் ஏக்கங்களுடன்
ஒருமுறை பார்ப்பதற்கு
ஓடோடி வரமாட்டீர்களா என்று
உங்கள் நினைவுகளுடன்
கண்ணீரில் வாழ்கின்றோம்
உங்கள் உயர்ந்த மலர்ந்த
தூய்மையான உள்ளம் என்றும்
எங்களை ஆசீர்வதிக்கட்டும்
நீங்கள் இறைவன் பாதம் அடைந்திருப்பீர்கள்
என்றாலும் ஏங்குகின்றோம் தினம் தினம்
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் நாம் வாழும் வரை
உங்கள் நினைவுகள் எமை வாட்டும்
என்றும் எங்கள் மனங்களில்
அழியாமல் நிலைத்திருப்பீர்கள்.

**உங்கள் ஆத்மா இறைபாதத்தில் சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்.**

(CS/55976) J-1

**என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## நாகரஞ்சனாதேவி சுப்பிரமணியம்



**அன்னை மடியில்
11.01.1953**

**ஆண்டவன் அடியில்
12.08.2024**

கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும், கைதடி வடக்கை வதிவிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்து வந்தவருமான நாகரஞ்சனாதேவி (தேவி) சுப்பிரமணியம் அவர்கள் கடந்த (12.08.2024) திங்கட்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - அமுதம்மா ( குண்டுமணி) தம்பதியின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற நடேஸ்வரி (கௌரி) யின் பாசமிகு சகோதரியும், கைதடியை பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் (மணியம் - Coperative Manager) அவர்களின் அன்பு மனைவியும், சிந்துஜா, சஞ்சீவன், நிலக்ஷன் (கண்ணன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மயூரன், அஜந்தா, அனோஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷாளினா (மகாலக்ஷிமி), றோசன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் சங்கர்,சக்தி, அருச்சுனன், அஜய் (கிருஸ்ணா) ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.08.2024) வியாழக்கிழமை முற்பகல் 8.00 - 11:30 மணிவரை அன்னாரது இல்லத்தில் 42 Route de Mantes 78200 favrieux France இல் இடம்பெறும்.தகனக்கிரியைகள் பிற்பகல் 1:30 - 2:30 வரை 95 Rue Marcel sembat 93430 villetaneuse France எனும் முகவரியில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**குடும்பத்தினர்.**

| | | |
|---|---|---|
| கணவர் | -33652497569 | (பிரான்ஸ்) |
| மகன் - சஞ்சீவன் | - 33660049946 | (பிரான்ஸ்) |
| மகன் - நிலக்ஷன் | - 33638140899 | (பிரான்ஸ்) |
| மகள் - சிந்துஜா | - 33699644050 | (பிரான்ஸ்) |
| | 077 009 2654 | (இலங்கை) |
| | 076 547 0381 | (இலங்கை) |

**இராசவீதி,
திருநெல்வேலி வடக்கு.**

(CS/55975) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி தெய்வா கந்தசாமி

**(ஓய்வு நிலை சுகாதார உதவியாளர் தொண்டர்-வரணி அரசினர் வைத்தியசாலை)**



தோற்றம் 30.11.1945 மறைவு 20.08.2024

பெரியதாயகம் இடைக்குறிச்சி, வரணியைப் பிறப்பிடமாகவும், மரக்காலை ஒழுங்கை சாமியன் அரசடி நெல்லியடி கரவெட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வா கந்தசாமி நேற்று (20.08.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு (குழந்தை)-பொன்னி தம்பதியின் அன்பு மகளும், திரு வைரமுத்து கந்சாமியின் (Retired Principal) அருமை மனைவியும், இன்பரதி (Teacher), அமரர் அமரகாந்தன், புனிதவித்தகன் (Contract Manager-QS-Access, PLC) புகழினி (Teacher), நிகரில்காந் (Senior Assistant Secretary-Ministry of Labour and Foreign Employment), எழில் முதல்வன் (DO-office of the DCS-Personnel Training) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வைரமுத்து இலட்சுமி, கந்தர் செல்லாச்சி ஆகியோரின் அன்பு மருமகளும், திருமதி சரஸ்வதிதேவி, காலஞ் சென்றவர்களான செல்லம்மா, தம்பிப்பிள்ளை, முத்துக்குமாரு, செல்லாச்சி, இராசரத்தினம், செல்வராசா ஆகியோரின் சகோதரியும், திவ்வியராசா, புஸ்பராணி, காலஞ்சென்றவர்களான இராசமலர், விஸ்ணுநாதன் ஆகியோரின் அண்ணியும், கிருஷ்ணமூர்த்தி (Retired ISA-Tamil), பவாநந்தினி (DO-Social Service-Colombo), சுபாசினி (Teacher), ரினோஜா (Do-DS office-Pandiyankulam), வதனமேகலை (Instructor-PDB), காலஞ்சென்ற ராஜினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபிநயன் (QS), இலக்கணன் (University-Jaffna), மனோஜ் (University-Peradeniya), செம்பூவினி (Student), ஆற்றலன் (Student), ஆர்வலன் (Student) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இறுதிநிகழ்வுகள் மரக்காலை ஒழுங்கை சாமியன் அரசடி, நெல்லியடி கரவெட்டியிலுள்ள வீட்டில் நடைபெற்று பூதவுடல் இன்று (21.08.2024) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் நல்லடக்கம் செய்வதற்காக முள்ளி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்:
**குடும்பத்தினர்**

(CR 55978) V-1

# மரண அறிவித்தல்

## இராஜரட்ணம் இராஜேஸ்வரன்

**(ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் வடக்கு மாகாணம்)**



தோற்றம் 06.11.1953 மறைவு 15.08.2024

விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் இராஜேஸ்வரன் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்), கடந்த 15.08.2024 வியாழக்கிழமை இரவு 11.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - இராசம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியர்) அவர்களின் பாசமிகு கணவரும், திவாகரன் (போலந்து), திருமகள் (கனடா), திருக்குமரன் (போலந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தீபா (டென்மார்க்), அகிலேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், இராசநாயகி, இராசலக்சுமி, இராஜலிங்கம், இராஜதுரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சபாநாயகம் மற்றும் கிரிஜா, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற தர்மரட்ணம் மற்றும் கனகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரஜீத், சஞ்ஜெய், ஆகியோரின் அம்மப்பாவும் கவினின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (22.08.2024 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமகன்**
விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.
**077 174 7518, 077 433 9426**

(CR 55979) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுனவினரை வைத்து எதைச் சாதிப்பார் ரணில்?

## சஜித்திடமிருந்தே சுபீட்சம் என இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21

நாட்டில் வரிசை யுகம் ஏற்படுவதற்குக் காரணமான பெரமுனவினரை அருகில் வைத்துக் கொண்டு ரணிலால் எதைத்தான் சாதிக்க இயலும்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழர் முற்போக்குக் கூட்டமைப்பின் பிரதித் தலைவருமான இராதாகிருஷ்ணன்.

சஜித்தாலும் எம்மாலும்தான் நாட்டின் சௌபாக்கியத்தை மீளக்கொண்டுவர முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்ததாவது:-

“பிரித்தாளுவது மட்டும்தான் ரணிலுக்குத் தெரிந்த கலை. விடுதலைப் புலிகள் அமைப்பு, பொதுஜன பெரமுன, சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய தரப்புகள் இதுவரை ஜனாதிபதி ரணிலால் பிரிக்கப்பட்டிருக்கின்றன - என்றார்.

(அ-ம-சி)

# இழப்பீட்டை செலுத்தி முடித்துள்ளார் மைத்திரி



கொழும்பு, ஓக. 21

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்கூட்டியே அறிந்திருந்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டின் கீழ் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடாக பத்து கோடி ரூபா இழப்பீடு செலுத்துமாறு கொழும்பு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் அந்தத் தொகையை பகுதிபகுதியாகச் செலுத்தி வந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மிகுதியாக இருந்த 1.2 கோடி ரூபாவையும் செலுத்தி முழுத் தொகையையும் செலுத்தி முடித்துள்ளார்.

(ஒ-6)

### தேர்தல்...

ஆணைக்குழுவின் இந்த அறிவிப்பால், மக்களின் எதிர்பார்ப்பு வீணடிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடரப்போவதாகவும் விஜயதாஸ ராஜபக்ச கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“விகிதாசாரத் தேர்தல் முறையில் இடம்பெற்றுவரும் மோசடிகளைத் தவிர்ப்பதற்காக தேர்தல் செலவு கண்காணிப்புச் சட்டத்தை மிகவும் சிரமத்துக்கு மத்தியில் நாங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினோம். ஊழலுக்கு எதிர்ப்பு எனத் தெரிவித்துக்கொள்ளும் எதிர்க்கட்சிகள் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற அனுமதிக்கவில்லை. கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. இருப்பினும் நிறைவேற்றினோம்.

தேர்தல் செலவு கண்காணிப்புச் சட்டம் ஆரம்பமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலேயே நடைமுறைப்படுத்தப்பட இருந்தது. என்றாலும் அந்தத் தேர்தல் இன்னும் இடம்பெறவில்லை. தற்போது இடம்பெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருகிறது.

தேர்தலில் ஒரு வேட்பாளர் எந்தளவு தொகையைச் செலவிடமுடியும் என்பதை நிர்ணயிக்கத் தேவையான வழிகாட்டலைக் குறித்த சட்டத்தில் பரிந்துரைத்திருக்கிறோம். வேட்புமனுத் தாக்கல் செய்து ஒரு வாரத்துக்குள் தேர்தல் ஆணைக்குழு குறித்த வழிகாட்டலின் பிரகாரம் ஒரு வாக்காளருக்காக வேட்பாளர் ஒருவர் எத்தனை ரூபா செலவிட முடியும்என்பதை நிர்ணயிக்கவேண்டும். அதன் பிரகாரம் இந்தத் தேர்தலில் ஒரு வாக்காளருக்கு 20 ரூபா அல்லது அதற்கு நிகரான ஒரு தொகையை நிர்ணயிக்கவேண்டும்என்ற நிலைப்பாட்டில் நான் உட்பட 20க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் இருந்தோம். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, தேசிய மக்கள் சக்தி போன்ற பிரதான கட்சிகள் 200 ரூபா முதல் 400 ரூபா வரை பரிந்துரைத்தன. இறுதியில் தேர்தல்கள் ஆணைக்குழு தற்போது ஒரு வாக்காளருக்கு வேட்பாளர் ஒருவர் 109 ரூபா செலவிட முடியும் என நிர்ணயித்துள்ளது. இது அசாதாரணமாகும். ஏனெனில் 109 ரூபாவை ஒரு கோடியே 71 இலட்சத்து 71 ஆயிரம் வாக்குகளால் பெருக்கிப் பார்த்தால் 186 கோடி ரூபா வரை அமைகிறது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் இந்தத் தீர்மானத்தால், தேர்தல் செலவு கண்காணிப்புச் சட்டம் ஊடாக மக்களின் எதிர்பார்ப்பு வீணாகியுள்ளது. ஆணைக்குழுவே இந்தச் சட்டத்துக்குப் பிழையான அர்த்தம் தெரிவித்து, செயற்படுத்தி இருக்கிறது. அதனால் தேர்தல் செலவு தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு எடுத்திருக்கும் தீர்மானத்தை மீளப்பெறுமாறு தெரிவித்து, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம்” - என்றார்.

(அ-ஒ-இ)

### பெரமுனவின்...

களாவர். ஜனாதிபதித் தேர்தலில் தாங்கள் ரணிலுக்கு ஆதரவளிக்கபோவதாக ஐக்கிய தேசியக் கட்சி உபதலைவர் அகிலாவிராஜ் காரியவசத்திடம் 17 பேரும் தெரிவித்துள்ளனர்.

(அ-ஒ-6)

### புதைகுழிகளுக்கு...

முல்லைத்தீவு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தால் இந்தப்போராட்டம்முன்னெடுக்கப்பட்டது. கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி உள்ளடங்கலாக நாட்டில் கண்டறியப்பட்ட புதைகுழிகளின் உண்மைத்தன்மைகள் வெளிப்படுத்தப்படவேண்டும். நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் விசாரணை நடத்துவதற்காக ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட விசாரணைக்குழு ஏமாற்றுவேலை. ஆதலால், அதன் விசாரணைகளை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தக் குழுவின் விசாரணை என்ற பெயரில் நீதியை மழுங்கடிக்கும் செயற்பாடுகளை ஸ்ரீலங்கா அரசாங்கம் நிறுத்திக் கொள்ளவேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினார்கள்.

நீதியை வெளிப்படுத்துமாறும், அரசாங்கத்துக்கு எதிராக எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கொக்குத்தொடுவாயைச் சேர்ந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

(அ-ம-66)

### அரசியல்...

இருவர் அடிதடியில் ஈடுபட்ட சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

தனியார் தொலைக்காட்சியொன்றில் நேற்றிரவு ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சிக்கான ஒளிப்பதிவு நேற்று பிற்பகல்வேளை நடைபெற்றது. குறித்த அரசியல் விவாத நிகழ்ச்சியில் நான்கு அரசியல்வாதிகள் பங்கேற்றிருந்தனர்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார் மற்றும் திகாம்பரம் இருவருமே இவ்வாறு கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியில் இருந்து ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கியுள்ள வேலுகுமார் எம்.பி.யை, திகாம்பரம் துரோகி என விளிக்க, அதற்கு வேலுகுமார் பதிலடி கொடுத்துள்ளார். அத்துடன், வேலுகுமார் எம்.பி.யை திகாம்பரம் 'பார்' குமார் என விமர்சித்தார். இதற்கு, நான் 'பார்' குமார் எனில் இவர் 'குடி' திகா என வேலுகுமார் குறிப்பிட்டதையடுத்தே இருவரும் கைகலப்பில் ஈடுபட்டனர்.

(அ-ம-44)

### பயணிகள்...

750 வழித்தடத்தில் பயணிகளை ஏற்றியவாறு பயணித்த தனியார் பேருந்து நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் வல்லைப்பாலத்துக்கு அண்மித்ததாக திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்துள்ளது. சாரதியின் பக்கமாக உள்ள பின்பக்க சக்கரங்களில் ஒரே நேரத்தில் காற்றுப் போனதன் காரணமாக கட்டுப்பாட்டை இழந்து சுமார் 50 அடி தூரம் இழுபட்டுச் சென்ற நிலையில் சாரதியின் சாமர்த்தியத்தால் வீதி ஓரமாக பேருந்து நிறுத்தப்பட்டது. வல்லை இரும்புப் பாலத்தில் இருந்து சுமார் நூறு மீற்றர் தொலைவில் குறித்த சம்பவம் நேர்ந்துள்ள நிலையில், பாலத்தை கடக்கும்போது இந்த விபத்து நேர்ந்திருந்தால், பெரும் அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ-ஒ-100)

### இளைஞரின்...

சந்தையா மோகனதாஸன் (வயது-28) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டிருந்தார். உடற்கூற்றுப் பரிசோதனையில், அவர் அளவுக்கதிகமான ஹெரோய்ன் மற்றும் ஐஸ் பாவனையால் உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், மேலதிக விசாரணைகள் மற்றும் புலன் விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உயிரிழந்தவரின் நண்பர்கள் சிலரைப் பொலிஸார் விசாரணை வளையத்துக்குள் கொண்டுவந்துள்ளனர்.

(அ-ம-19)

### 70%...

இதுவரை நாம் முன்னெடுத்த கருத்துக் கணிப்புகளின் அடிப்படையில் 60 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை எம்மால் பெறமுடியும். சில வேளைகளில் 70 வீதத்தையும் தாண்டிய வகையில் கூடுதல் வாக்குகளைப் பெறுவோம்.

கோத்தாபய ராஜபக்ச பெற்றுக்கொண்ட 69 இலட்சம் வாக்குகளில் உண்மையில் 50 இலட்சம் வாக்குகள் பாரம்பரிய வாக்குகள் அல்ல. அதுபோல சஜித் பெற்ற வாக்குகளில் பல இலட்சம் வாக்குகள் சஜித்துக்கானவை அல்ல. அவை கோத்தாபயவுக்கு எதிரான வாக்குகள். புதிய வாக்காளர்களாக 12 இலட்சம் பேர் உள்ளனர். அவர்கள் எம்மையே ஆதரிக்கின்றனர். ஆதலால், 60 தொடக்கம் 70 வீதம் வரையிலான வாக்குகளை நாம் பெறுவோம் - என்றார்.

(அ-ம-சி)

### ரணிலுக்கு...

படையற்றவை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள சமையல் எரிவாயு சிலிண்டர் சின்னம் குறித்து ஒரு தரப்பினர் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளார்கள். உள்ளூராட்சித் தேர்தலில் ஒரு தரப்பினருக்கு சிலிண்டர் சின்னம் வழங்கப்பட்டதால், ஜனாதிபதி ரணிலுக்கு அந்தச் சின்னம் வழங்கப்பட்டதுதவறுஎன்றுஅவர்கள்குறிப்பிட்டுள்ளனர். இந்த முறைப்பாடு அடிப்படையற்றது. ஏனெனில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்துக்கும் ஜனாதிபதித் தேர்தல் சட்டத்துக்கும் இடையில் பெரியளவிலான வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே இந்த முரண்பாட்டை நிராகரித்துள்ளோம்” - என்றார்.

(அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துநெறி பொன்விழா சிறப்பு மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துமன்றம் நடத்தும் இந்துநெறி பொன்விழா சிறப்பு மலர் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இந்துமன்றத் தலைவர் க.கஜன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-66)

## கலைவிழா இன்று

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ். இராமநாதன் கல்லூரியின் 110 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுக் கலைவிழா இன்று புதன்கிழமை மாலை 3 மணியளவில் கல்லூரியின் மைதானத்தில் கல்லூரி அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவி இசைக் குயில் திருமதி விஜயலக்சுமி சீனிவாசகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ச-66)

## வெள்ளைமாளிகையில் மஸ்க்?

தனது ஆட்சியில் எலான் மஸ்க்குக்கு வெள்ளைமாளிகையின் ஆலோசகர் பதவி அல்லது அமைச்சுப் பதவியொன்றை வழங்க விரும்புவதாக குடியரசுக் கட்சியின் அதிபர் வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். (ம)

## இந்தியாவில் நிலநடுக்கம்

புதுடில்லி, ஓக. 21

இந்தியாவின் ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பாரமுல்லாவில் நிலநடுக்கமொன்று ஏற்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.9 ஆகப் பதிவாகியுள்ளது. பாரமுல்லாவில் பூமிக்கு அடியில் 5 கிலோமீற்றர் ஆழத்தில் நேற்று காலை 6.45 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. ஏழு நிமிட இடைவெளியில் 4.9 மற்றும் 4.8 என்ற ரிக்டர் அளவில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் வீடுகள் லேசாக அதிர்ந்துள்ள நிலையில், இதனால் அச்சமடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

சில இடங்களில் மீட்பு பணிகள் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. (ச-இ)

"குழந்தையின்மைக்கு சிறந்த தீர்வு"

# மாபெரும் இலவச கருவளச் சிகிச்சை முகாம்

- நீங்கள் நீண்டகாலமாக குழந்தைப் பேறிற்காக காத்திருக்கும் தம்பதியினரா ?
- நீங்கள் நீண்டகாலமாக அடுத்த குழந்தையை எதிர்பார்த்து காத்திருக்கும் பெற்றோரா ?

கருவளச் சிகிச்சையில் புகழ்பெற்ற வைத்திய நிபுணர்களை சந்தித்து ஆலோசனை பெறும் அரியவாய்ப்பு உங்கள் அனைவருக்கும் கிடைக்கின்றது.

- காலம் : 24.08.2024 சனிக்கிழமை
- நேரம் : காலை 9.00 மணி - பிற்பகல் 2.00 மணிவரை
- இடம் : இணுவில் - மக்லோட் வைத்தியசாலை

ஏற்கனவே முற்பதிவு செய்தவர்களுடன் அனைவரும் பங்குபற்றலாம்.
கருவளச் சிகிச்சையானது உங்கள் வசதியைக் கருத்திக்கொண்டு இணுவில் மக்லோட் வைத்தியசாலையில் மட்டுமே நடைபெறுகின்றது.
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது பயன்பெற்றுக்கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.




கருவளச் சிகிச்சைக்கு வருவதற்கான பாதை வரைபடம்

தொடர்புகளுக்கு:
077 121 5005, 077 121 5003,
021 224 1569
மக்லோட் வைத்தியசாலை,
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 08 . 1940

மறைவு 19 . 08 . 2024



**அமரர் கனகராசா குணரத்தினம் (கார்கார நடராசா)**

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க வீதியை பிறப்பிடமாகவும் இராஜவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கனகராசா குணரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் (19.08.2024) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகராசா-முத்தம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் யோகராணியின் அன்புக்கணவரும், செந்தில்ராஜ் (கனடா), குகாஜினி, நர்மிலராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - தொழிற்துறை திணைக்களம் - வடமாகாணம்), நரேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் அக்னீசியா (கனடா), திருச்செல்வம், தர்மினி, டிலக்சியா ஆகியோரின் அன்பு மாமனாரும் கிஷானி, அபிஷானி, அஸ்மிதா (கனடா), கோபிகா, கருணிகா, சிவசுஜன், யாதுசன், கனிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், ராசலட்சுமி, சுந்தரலிங்கம் மற்றும் கந்தசாமி, பேபி கமலா, மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பூமணி, மங்கையற்கரசி, செல்வராசா, தங்கராசா மற்றும் மகேஸ்வரி, பராசக்தி, சகுந்தலா, இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.08.2024) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீ சக்திவேல் முருகன் முன் ஒழுங்கை,
இராஜ வீதி, கல்வியங்காடு.

தகவல்: குடும்பத்தினர்.
077 615 1369, 077 662 0905, 077 664 8668

(CS 1182) V-1

# 29 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 26 . 10 . 1942

விண்ணில் 11 . 09 . 1995



**அமரர் முருகேசு கனகசபை**

(ஆசிரியர்)

திதி: ஆவணி அபரபக்க துதியை

ஆண்டுகள் இருபத்தொன்பது ஆனதுவே!
ஆயினும் மாண்டிடுமோ உம் நினைவு!
நும் தூய அன்பும் எதற்கும்
துவண்டிடா நிமிர் நெஞ்சும்
நாம் வாழ வழி காட்டுதப்பா!
வையத்தே எமை என்றும்
வாழ்த்தி வழிகாட்டிடுங்கள்.

கைதடி - நுணாவில்,
சாவகச்சேரி

உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org